Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY NOVEMBER 2, 2022

புதன்கிழமை நவம்பர் 02, 2022 | ஒளி: 08 கதிர்: 134 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# மின் பாவனை 20% குறைவு

இவ்வாண்டு டிசெம்பர் இறுதி வரையில் நாட்டுக்கு தேவையான நிலக்கரி கையிருப்பில் உள்ளதாகவும், அடுத்த ஆண்டுக்கான நிலக்கரி ஏப்ரல் நடுப்பகுதிக்குள் இறக்குமதி செய்ய வேண்டிவரும் என இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். அத்துடன் இவ்வாண்டில் மின் பாவனை 20 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது என்றார்.

தொடர்ச்சி P2



# சீறுகிறது இயற்கை

- மண்சரிவில் வயோதிபர் உயிரிழப்பு
- வடக்கில் தாழ்நிலங்களில் வெள்ளம்
- மருதமடு குளம் வான்பாய்கிறது
- நாடளாவிய ரீதியில் கடும் மழை
- 6 மாவட்டங்களுக்கு மண் சரிவு அபாயம்

நாட்டில் தற்போது நிலவும் மிகமோசமாக வானிலை இன்னும் சில நாள்களுக்கு நீடிக்குமென வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது, இலங்கையை சூழவுள்ள பகுதிகளில், கீழ் வளிமண்டலத்தில் வளிமண்டலத் தளம்பல்நிலை தொடர்ந்தும் காணப்படுகின்றது என்றும் அறிவித்துள்ளது.

இதனால், நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அறிவித்துள்ளது. தொடர்ச்சி P2

# சட்டமா அதிபரின் அனுமதியின்றி நடவடிக்கை எடுக்கக்கூடாது

## அழைப்பாணையை வாபஸ் பெற்றது நீதிமன்றம்

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 97 (1) பிரிவுக்கு அமைய சட்டமா அதிபரின் அனுமதியின்றி பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஷமிந்த விக்கிரம அறிவித்ததையடுத்து, அழைப்பாணையை வாபஸ் பெறுமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, நேற்று (01) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2



# இஸ்லாம் பாடப் புத்தகங்களை நவ. 15க்கு முன் வழங்கவும்

## அமைச்சின் அதிகாரிகளுக்கு கல்வி அமைச்சர் பணிப்புரை

அனைத்து பாடசாலைகளுக்கும் தேவையான இஸ்லாம் பாடப் புத்தகங்களை இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தற்காலிகமாக வழங்குமாறு, கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவால் அமைச்சு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், நேற்று (01) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# “இணைந்து செயற்படுவது தேர்தலின் இலக்கு அல்ல”

## த.மு.கூ தலைவர் மனோ கணேசன்



இனத்தின், சமூகத்தின், நாட்டின் பொது பிரச்சினைகள், சவால்கள், இலக்குகள் தொடர்பில் மாறுபட்ட கட்சி தலைவர்கள் ஒன்றாக அமர்வது, பேச்சுகளை நடத்துவது, முற்போக்கான கலாசாரம். இதுதான் பொது நோக்கில் இணைந்து செயற்படுவது என்பதாகும். ‘இணைந்து செயற்படுவது’ என்பது எப்போதும் தேர்தலை இலக்கு வைத்த செயற்பாடு என்பது மட்டும் தான் என்ற சம்பிரதாயத்தில் இருந்து நாம் வெளியே வர வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ஜே.ஆரின் வழியில் பயணிக்கும் ஒரே தலைவர் ரணில்

## பெல்பொல விபஸ்ஸி தேரர் தெரிவிப்பு



மறைந்த தலைவர் ஜே.ஆர். ஜெயவர்தன தனது இளமைக் காலத்திலேயே அரச தலைவராக நாட்டைப் பொறுப்பேற்றிருந்தால் இலங்கை இன்று வளமான நாடாகி இருக்குமென்றும் அவருக்கு அடுத்தபடியாக அவரை ஒத்த அரச தலைவராக இருப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே முடியுமென்றும் கோட்டே விகாரை பீடத்தின் பதிவாளர் பெல்பொல விபஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# நவம்பர் மாத இறுதிக்குள் சீனாவில் இருந்து டீசல்

## அபுதாபி மாநாட்டில் அமைச்சர் அறிவிப்பு

கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள தமது நாட்டுக்கு, நவம்பர் மாத இறுதிக்குள் சீனாவில் இருந்து டீசல் தொகுதி வந்தடையும் என்று எதிர்பார்ப்பதாக, மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நேற்று (01) தெரிவித்தார்.

இலங்கைக்கு ஏதேனும் ஆதரவு கிடைக்குமா என்பது குறித்து அபுதாபியில் நடைபெற்ற சர்வதேச பெற்றோலிய கண்காட்சி மற்றும் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்குறிப்பிட் விடயத்தைக் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

### கூட்டமைப்பின் ஆலோசனையால்

# வடக்கு கடற்பரப்பு தமிழக மீனவர் வசமானது

## விமல் குற்றச்சாட்டு; அரசாங்கம் மீது சீறிப் பாய்கிறார்

பா.நிரோஸ்



தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆலோசனையின் பேரில், வடக்கு கடற்பகுதி முழுவதையும் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு அரசாங்கம் வழங்கியுள்ளதாக மேலவை இலங்கை கூட்டணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

வடக்கு கடற் பகுதியில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் தென்னிந்திய மீனவர்களைக் கைது செய்ய வேண்டாமென கடற்படை உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலவை இலங்கை கூட்டணியின் தலைமையகத்தில் நேற்று (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

வடக்கு கடற்பகுதியை மீட்டுத் தருமாறு வட பகுதி மீனவர்கள் நீதிமன்றத்துக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### கெப்பித்திகொல்லாவ பதற்றம்

# பொலிஸ் சார்ஜன்ட் பலி: 14 பேர் கைதாகினர்



அநுராதபுரம், கெப்பித்திகொல்லாவ, ரம்பகெப்புவெவ பகுதியில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது பொதுமக்கள் தாக்குதலில் படுகாயமைடைந்த பொலிஸ் சார்ஜன்ட் நேற்று (01) உயிரிழந்துள்ளார் என்று கெப்பித்திகொல்லாவ தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

### ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கில்

# எழுத்துமூல சமர்ப்பணங்களை தாக்கல் செய்யுமாறு உத்தரவு



முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட மூவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மூன்று வழக்குகள் குறித்த ஆரம்ப ஆட்சேபனைகள் தொடர்பான எழுத்துமூல சமர்ப்பணங்களை தாக்கல் செய்யுமாறு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம், நேற்று (01) உத்தரவிட்டது.

நேற்றையதினம் வழக்கு விசாரணை முன்னெடுக்கப்பட்ட போது, பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கலிங்க இந்திரதிஸ்ஸ, வழக்குகளை நிராகரித்து பிரதிவாதிகளை விடுவிக்குமாறு கோரிய ஆரம்ப ஆட்சேபனைகள் தொடர்பான எழுத்துமூல சமர்ப்பணங்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினார்.

தொடர்ச்சி P2

# வாகன சொகுசு வரிகளில் திருத்தம்

பா.நிரோஸ்

வாகனங்களை இறக்குமதி செய்யும்போது விதிக்கப்படும் சொகுசு வரிகளில் திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# சிற்றுண்டிகளின் விலைகள் குறைப்பு



சிற்றுண்டிப் பொருட்களின் விலைகள், நேற்று (01) நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் வகையில் 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்க தலைவர் அசேல சம்பத், நேற்று (01) தெரிவித்தார்.

100 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட பால் தேநீரின் விலை மற்றும் 30 ரூபாயாக விற்பனை செய்யப்பட்ட தேநீர் ஆகியவற்றின் விலைகளில் மாற்றம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கொழும்பில் இன்று பேரணி

# மாற்றங்களை விரும்பாதவர்களே பங்கெடுப்பர்

பா.நிரோஸ்

நாட்டின் கடந்த கால தவறுகளைத் திருத்தி, நாட்டை ஸ்திரப்படுத்தி, ‘சிஸ்டம் சேஞ்சை’ ஏற்படுத்துவதை விரும்பாதவர்களே இன்றைய (02) போராட்டத்தில் கலந்துகொள்வார்கள் என தெரிவிக்கும் அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் அமைச்சருமான மனுஷ நாணயக்கார, நாட்டில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவது தவறென்றால் இன்றைய போராட்டம் சரியானது என்றார்.

இன்று (02) முன்னெடுக்கப்படும் போராட்டம் தொடர்பில் அமைச்சரவையில் உத்தியோகபூர்வமற்ற முறையில் கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (01) நடத்தப்பட்ட வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எரிபொருள், எரிவாயுவுக்காக வரிசைகளில் நின்றவர்களா இன்றைய போராட்டத்தில் கலந்துகொள்கிறார்கள்? இல்லை என்றால், நாட்டில் கடந்த காலங்களில் அமல்படுத்தப்பட்டிருந்த மின்வெட்டுகளால் பாதிக்கப்பட்டவர்களா? அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவடைந்து வருவதை பொறுத்துக் கொள்ள முடியாதவர்களா?

தொடர்ச்சி P2

# ஒன்றிணையுமாறு சகலருக்கும் அழைப்பு

பா.நிரோஸ்

அடக்குமுறையை நிறுத்த வேண்டும்; பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டுமென வலியுறுத்தி கொழும்பில் இன்று (02) பாரிய எதிர்ப்புப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மருதானை எல்பிஸ்டன் திரையருங்குக்கு அருகில் இன்று பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகவுள்ள இந்த எதிர்ப்புப் பேரணியானது கொழும்பு, கோட்டை ரயில் நிலையம் வரையில் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சீறுகிறது இயற்கை

வடக்கு, வடமத்திய, மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும்வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக பெய்துவரும் மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளம் தாழ்நில பிரதேசங்களுக்குள் புகுந்துகொண்டுள்ளது.

சிலரின் வீடுகளுக்குள்ளும், புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் வணிக நிலையங்களுக்குள்ளும் வெள்ளநீர் புகுந்துகொண்டுள்ளது. கைவேலி, மயில்குஞ்சன்குடியிருப்பு, இரணைப்பாலை, ஆனந்தபுரம் போன்ற தாழ்நிலப்பகுதிகள் வெள்ளநீரினால் நிரம்பியுள்ளன.

மழைவெள்ளத்தினால் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட மருதமடு குளம் நிரம்பியுள்ளது.14.5 அடி கொள்ளவு கொண்ட மருதமடு குளம் நிரம்பி வான்பாய தொடங்கியுள்ளது.

பாண்டியன் வெளி வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கள்ளியடி வயல் நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன பேராற்று நீர் பாய்ந்தோடுவதால் சுமார் 1,000 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளார்கள்.

ஒரு மாத பயிராக காணப்படும் நிலையில் வெள்ளநீர் மூன்று நாட்களுக்கு நிற்குமாக இருந்தால் பயிர்கள் முற்றாக அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் வள்ளிபுனம் பகுதியில் வீதியோரமாக நின்ற பாரிய புளியமரமொன்று சரிந்து வீதியின் குறுக்கே வீழ்ந்துள்ளது இந்தமரத்தினை அகற்றும் நடவடிக்கையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஊழியர்கள் கனரக இயந்திரம் கொண்டு அகற்றி, போக்குவரத்தை சீர்செய்துள்ளார்கள்.

தொடர் மழையினால் மலையகத்திலும் ஆங்காங்கே பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

பண்டாரவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காஹகல்ல அம்பரவ பகுதியில் மண்மேட்டுடன் கூடிய கொங்கிரீட் கட்டடம் வீட்டின் மீது சரிந்து வீட்டின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததில் ஆண்ணொருவர், நேற்று முன்தினம் (31) உயிரிழந்துள்ளார் என்று பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

டபிள்யூ.எம். ஜெயசேகர (73 வயது) என்பவரே உயிரிழந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர் தனது மனைவியுடன் வீட்டின் அறையில் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் திடீரென சுவர் இடிந்து விழுந்துள்ளது. சம்பவத்தில் குறித்த நபரின் மனைவி தெய்வாதீனமாக காயங்களுடன் உயிர் தப்பி, தியத்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்தும் சிகிச்சைகளை பெற்று வருகிறார்.

உயிரிழந்தவரின் சடலம் தியத்தலாவ பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், பிரேத பரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, பதுளை, கேகாலை, மாத்தறை, மொனராகலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய 06 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

குறித்த மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் மண்சரிவு, மண்மேடு சரிந்து விழுதல் மற்றும் கற்பாறை சரிவு போன்ற அனர்த்தங்கள் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அதேவளை, நாட்டை அண்மித்த பகுதிகளில் ஏற்பட்டுள்ள குறைந்த வளிமண்டல குழப்பம் காரணமாக நாடு முழுவதும் கடும் மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வட மேல், ஊவா மற்றும் வட மாகாணத்தின் சில பகுதிகளில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் ஏனைய இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை பெய்யக்கூடும் எனவும் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

எஸ்.கணேசன், செ.கீதாஞ்சன்

# மின் பாவனை 20% குறைவு

2023 ஜனவரி வரையில் நாளாந்தம் இரண்டு மணிநேர மின் வெட்டே இடம்பெறும். அடுத்த ஆண்டுக்கான நிலக்கரியை இறக்குமதி செய்ய 600 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகின்றது என்றார். இதற்கு மேலதிகமாக முற்பணம் செலுத்தவும் பணம் தேவைப்படுகின்றது. இப்போது வரையில் ஐந்து கப்பல்களுக்கான பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், ஏனைய 33 கப்பல்களுக்கான பணம் செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# சட்டமா அதிபரின் அனுமதியின்றி நடவடிக்கை எடுக்கக் கூடாது

காலி முகத்திடலுக்கு அருகில் கடந்த ஒக்டோபர் 10ஆம் திகதி நடைபெற்ற அமைதிப் போராட்டத்தை தடுத்த குற்றச்சாட்டின் பேரில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் டயஸ் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நளின் தில்ருக் ஆகியோருக்கு பிறப்பிக்கப்பட்ட அழைப்பாணையே கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் வாபஸ் பெறப்பட்டது.

கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் குறித்து, குற்றவியல் நடைமுறைச் சட்டத்துக்கு அமைய ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தனவினால் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், மேற்குறித்த இரண்டு உயர் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் நவம்பர் 8 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்றையதினம் (01) நகர்த்தல் பத்திரத்தை தாக்கல் செய்து ஆஜராகிய சிரேஷ்ட அரச சட்டத்தரணி, உண்மைகளை தவறாக சித்தரித்து உத்தரவு பெறப்பட்டதால், இரண்டு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக விடுக்கப்பட்ட அழைப்பாணையை மீளப்பெறுமாறு கோரினார்.

# "இணைந்து செயற்படுவது தேர்தலின் இலக்கு அல்ல"

பொது விடயங்களில் ஒன்று சேர வேண்டும் என்ற விடயத்தில், சிங்கள அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள், சிங்கள மக்கள், தமிழ் பேசும் அரசியல்வாதிகளை விட, தமிழ், முஸ்லிம் கட்சிகளைவிட கணிசமாக முற்போக்காக இருக்கிறார்கள். நாமும் அந்த முற்போக்கான கலாச்சாரத்தை உள்வாங்க வேண்டும். நமது கட்சிகளுக்கு வெளியே பெரும்பான்மை அரசியல்வாதிகளுடனும் பொது விடயங்களில் ஒன்றாய் அமர்ந்து உரையாட நாம் தயங்குவதில்லை என்றார்.

தீபாவளி தினத்தில் காலையில் எதிரணி தலைவருடனும், மாலையில் நாட்டின் ஜனாதிபதியுடனும் அமர்ந்து நமது மக்களின் விவகாரங்களை உரையாட தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருக்கு முடிகின்றது என்றால் அது கூட்டணிக்கு உரிய அங்கீகாரத்தையே காட்டுகிறது என்றார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி இப்போது, ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள் ஒரு பிரதான பங்காளி கட்சி. ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள் வேறு தமிழ் கட்சிகளை உள்வாங்குவது, மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி, தேர்தல் நோக்குகளில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் கூட்டு சேர்வது, தேர்தல் கூட்டணிகள் அமைப்பது என்பவற்றை தேர்தல் வரும் போது நிச்சயமாக பேசலாம். நமது மக்களின் பிரதிநிதித்துவங்களை அதிகரிக்கலாம் என்றார்.

இன்று தேர்தல் கூட்டணி பற்றி, இ.தொ.காவுடன் நாம் பேசவில்லை. அதேவேளை தென்னிலங்கை தமிழ் கட்சிகள் ஒரு கூட்டணிக்குள் வரவேண்டும் என்று எவரும் எமக்கு அழுத்தம் தரவும் இல்லை.

# ஜே.ஆரின் வழியில் பயணிக்கும் ஒரே தலைவர் ரணில்

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தனவின் இரத்த உறவினரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அதற்கான ஆளுமை இருப்பதாக சுட்டிக்காட்டிய தேரர், இத்தலைவர்கள் அரசியல் மூலம் எதையும் சம்பாதிக்காமல், தமது சொத்துக்களை கூட மக்களுக்காக தியாகம் செய்துள்ளார்கள் என்றும் கூறினார். சரியான தலைமைக்கு அன்று அங்கீகாரம் கிடைக்காததாலேயே இன்று நாடு இவ்வாறானதொரு

**ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, மனிதாபிமானம் நிரம்பிய தலைவராக செயல்பட்டார்**

நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜயவர்தனவின் 26ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் கொழும்பு 07, ஜே.ஆர்.ஜயவர்தன மையத்தில் நேற்று (01) நடைபெற்ற நிகழ்வில் விஷேட அனுசாசன உரை நிகழ்த்தியபோதே பெல்பொல விபஸ்ஸி தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனவின் சிறப்புகளை நினைவுகூரும் நிகழ்வு ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படுகிறது. ஜயவர்தன ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, அரச தலைவராக இருந்தாலும் சரி ஒரே மாதிரியான மனிதாபிமானம் நிரம்பிய தலைவராக செயல்பட்டார் என்றார்.

# இஸ்லாம் பாடப் புத்தகங்களை நவ. 15க்கு முன் வழங்கவும்

மேலும், எதிர்காலத்தில் பாடப் புத்தகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு திருத்தங்கள் தொடர்பிலும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவினுடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கான இஸ்லாம் பாடப் புத்தகத்தினை மீள் விநியோகம் செய்தல் தொடர்பில், நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டத்தரணி ஷஹ்பி எச். இஸ்மாயில் தலைமையிலான குழுவினர், பல அரசியல் பிரமுகர்களுடன் தொடர்ச்சியாக சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொலிஸ் சார்ஜன்ட் பலி: 14 பேர் கைதாகினர்

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் பௌத்த பிக்கு உள்ளிட்ட 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கெப்பித்திக்கொல்லாவ பகுதியில் நேற்று முன்தினம் (31) மாலை காட்டு யானை தாக்கியதில் ரம்பகெப்புவெவ திட்டகோனேவ பிரதேசத்தில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தந்தையான பி.குணசிங்க (வயது 48) என்ற விவசாயி உயிரிழந்தார். இந்த சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் யானைப் பிரச்சினையைத் தீர்க்குமாறும் வலியுறுத்தி பௌத்த பிக்கு உள்ளடங்கலாக 100க்கும் மேற்பட்ட பிரதேச வாசிகள் ரம்பகெப்புவெவ பகுதியில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த தகவல் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்குச் சென்ற இதனையடுத்து, நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காகவும் தாக்குதலுக்கு இலக்காகிய பொலிஸ் அதிகாரியை மீட்பதற்காகவும் வானை நோக்கி பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில், வாரியபொல பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை ஏ.பி.சுனில் (வயது 54) என்ற பொலிஸ் சார்ஜன் காயமடைந்து, கெப்பித்திக்கொல்லாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கும் பின்னர் மதவாச்சி வைத்தியசாலைக்கும் மாற்றப்பட்ட நிலையில் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பொலிஸ் சார்ஜனின் சடலம் மதவாச்சி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

# வடக்கு கடற்பரப்பு தமிழக மீனவர் வசமானது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆலோசனையின் பேரிலேயே தமிழ்நாட்டு மீனவர்கள் வடக்குக் கடற் பகுதியை கொள்ளையடிக்க இடமளிக்கப்பட்டுள்ளது. இதனால் நாட்டின் இறையான்மை இல்லாதுபோகும் என்றார்.

இலங்கையின் இறையான்மை நாட்டு மக்களிடமே காணப்படுகிறது. ஆனால், நாட்டின் சுயாதீனத்தை நாட்டின் பாதுகாப்புத் தரப்பினரே பாதுகாக்க வேண்டும். எனினும், வடக்குக் கடல் பகுதியில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டாமென கடற் படையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எமது நாட்டின் கடல் வளத்தை மற்றொரு நாட்டின் மீனவர்கள் கொள்ளையடிப்பதற்கு இடமளிக்கப்பட்டு நாட்டின் சுயாதீனத்தை அரசாங்கம் இல்லாதொழிப்பதாகவும் கூறினார்.

நாடு கொஞ்சம் கொஞ்சமாக சுயாதீனத்தை இழந்து வருகிறது. பொருளாதார நெருக்கடியை காரணங்காட்டி நாட்டின் சுயாதீனத்தை இல்லாதொழித்து வருகிறார்கள். கையெழுத்திட முடியாமல்போன எம்.சி.சி ஒப்பந்தத்தையும் வேறொரு பெயரில் அரசாங்கம் கொண்டுவரவுள்ளது. மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்ட இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தத்தையும் அரசாங்கம் கையெழுத்திடப்போகிறது என்றார்.

# சிற்றுண்டிகளின் விலைகள் குறைப்பு

மேலும், சமையல் எரிவாயு மற்றும் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டால், மதிய உணவுப் பொதியின் விலையையும் குறைக்க எதிர்பார்த்துள்ளாகவும் குறிப்பிட்டார்.

கொழும்பு புறக்கோட்டை மொத்த சந்தையில் பருப்பு, கோதுமைா உள்ளிட்ட சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டதை அடுத்தே விலைகளைக் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக சம்பத் கூறினார்.

தற்போது சந்தையில் போதுமான அளவு கோதுமை மா கைருப்பு உள்ளதாகத் தெரிவித்த அவர், அதன் காரணமாக பாண் உள்ளிட்ட ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளும் குறைக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இதேவேளை, 450 கிராம் நிறையுடைய பாண் மற்றும் ஏனைய பேக்கரி பொருட்களின் விலைகள், 31ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் 10 ரூபாயால் குறைக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நவம்பர் மாத இறுதிக்குள் சீனாவில் இருந்து டீசல்

அரசாங்கங்களும் தனியார் துறைகளும் தங்களது குறைக்கப்பட்ட காபன் மற்றும் நிகர-பூஜ்ஜிய உத்திகளை எவ்வாறு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதை கலந்துரையாட அபுதாபி மாநாட்டில் அமைச்சர்கள் ஒன்றுகூடியுள்ளனர்.

ஜோர்ஜியா, துருக்கி, ருமேனியா ஆகிய நாடுகளின் துறைசார் அமைச்சர்களின் குழுவில் அமைச்சர் காஞ்சனவும் இடம்பெற்றுள்ளார்.

உலகளாவிய எண்ணெய் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் தேசிய எண்ணெய் நிறுவனங்களின் தலைவர்களும் குறித்த மாநாட்டுக்கு விஜயம் செய்துள்ளனர்.

உலகளாவிய தொழிற்றுறையின் உட்கட்டமைப்பில் பல ஆண்டுகளாக குறைந்த முதலீட்டால் அதிகரித்துள்ள மற்றும் புவிசார் அரசியல் காரணமாக இந்த ஆண்டு அதிகரித்த எரிசக்தி நெருக்கடிக்கான தங்களுடைய பதில் குறித்து கலந்துரையாடவுள்ளனர்.

# எழுத்துமூல சமர்ப்பணங்களை தாக்கல் செய்யுமாறு உத்தரவு

இதனைடுத்து, பிரதிவாதிகளின் சமர்ப்பணங்களை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், முறைப்பாட்டாளர் தரப்பின் எழுத்துமூல சமர்ப்பணங்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டது. 2011 ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், சதொச நிறுவனத்தின் ஊழியர்களை அரசியல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தியதன் மூலம் அரசுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூவருக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவினால் 3 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

# மாற்றங்களை விரும்பாதவர்களே பங்கெடுப்பர்

மூடியிருந்த பாடசாலைகள் மீள திறக்கப்பட்டு மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதாலா இந்த போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது? பெப்ரவரி மாதம் வரையில் விமானங்களில் ஆசனங்கள் இல்லை. அந்தளவு நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் வந்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் தொடர்ந்து போராட்டங்கள் முன்னெடுப்பது நாடு வீழ்ந்திருந்த நிலையில் இருந்து முன்னேறி வருவதாலா? என்கிற பல்வேறு கேள்விகள் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டை ஸ்தீர நிலைக்குக் கொண்டுவருவதற்காக வரி திருத்தங்களை அரசாங்கம் மேற்கொள்கிறது. இவ்வாறான நிலையில் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் சங்கமும் இதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுவை தாக்கல் செய்துள்ளது. இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது உயர்நீதிமன்ற நீதியரசர்கள் சங்கத்தினர் எவ்வாறு செயற்படுவார்கள் என்பது தெரியவில்லை.

# ஒன்றிணையுமாறு சகலருக்கும் அழைப்பு

பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, முன்னிலை சோசலிஷ கட்சி, பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகபெரும தலைமையிலான கூட்டணியினர், பாராளுமன்ற உறுப்பினர் சம்பக்க ரணவக்கவின் 43ஆவது படையணி, கோட்டா கோகம போராட்டக்காரர்கள், தொழிற்சங்கத்தினர், சிவில் அமைப்புகள், ஊடக அமைப்புகள் உள்ளிட்ட பலரும் இந்த எதிர்ப்புப் பேரணியில் கலந்துகொள்ள உள்ளனர்.

# கடுமையான சட்ட நடவடிக்கை அவசியம்

## ஜனாதிபதிக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கடிதம்



பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுக்கு பாடசாலை மாணவன் இலக்கான சம்பவத்துக்கு எதிராகக் கடுமையான எதிர்ப்பை தெரிவித்து இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், பாதுகாப்பு அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால், மாத்தறை மகாலிங் வட வித்தியாலயத்தில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கின்ற ஹரிஸ் ஹஸங்க தேஸான் (வயது 15) என்ற மாணவனுடைய தலையில் கடுமையான காயம் ஏற்பட்டமை சம்பந்தமாக, இலங்கை ஆசிரிய சேவை சங்கமானது அதற்கு எதிராகக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிப்பதோடு, அதற்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கையையும் முன்னெடுக்குமாறு வலியுறுத்தி நிற்கின்றது.

விசேடமாக இலங்கை பொலிஸார் இதுவரையில் மேற்கொண்டுள்ள சூட்டுச் சம்பவங்களால் ஏராளமான மனித உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளதோடு அண்மையில் இவ்வாறான சூட்டுச் சம்பவத்தால் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவரொருவனினதும் உயிர் பறிக்கப்பட்டதையும் எடுத்துக்காட்ட முடியும். அவ்வாறே தங்களுடைய உரிமைகளுக்காக போராட்டங்களை மேற்கொண்ட பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்பு போராட்டத்துக்கு அநீதியான முறையில் தாக்குதலை மேற்கொண்டு, அவர்களை கைது செய்து, தடுப்புக் காவலில் வைக்கும் செயற்பாடுகளை மேற்கொண்ட இலங்கை பொலிஸார் இதுவரையில் நாட்டின் பொது மக்களின் பாதுகாப்புக்கான சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்து தங்களுடைய பிரதான பொறுப்பில் இருந்து விலகி நிற்கின்றனர்.

நாட்டின் சட்டம் மற்றும் நிறுவனங்களின் குறுகிய நோக்கங்களுக்கு இடமளிக்காமல் முதலில் இலங்கை பொலிஸார் பொதுமக்களுக்குப் பாதுகாப்பு கிடைப்பதனை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு எமது சங்கம் பொறுப்புடன் கேட்டுக் கொண்டுள்ளதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் கடிதத்தின் பிரதியினை பாதுகாப்புச் செயலாளருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் அனுப்பி வைத்துள்ளதாக சங்கத்தின் தேசிய அமைப்பாளர் பிரதீப் தெரிவித்தார்.


## அற்றோர்னி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 15/18, 25 வது ஒழுங்கை, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03 என்ற இடத்தில் வசிக்கும் சுஜாயி அசோக சமரசேகர அதுலத்முதலி வேறுபெயர் சுஜாயி அசோக சமரசேகர டின்டோ (பிரித்தானிய கடவுச்சீட்டு இல. 120128804) என அழைக்கப்படும் மற்றும் குறிப்பிடப்படுகின்ற நான் இலங்கை ஜனநாயக குடியரசிற்கும் அதன் வாழ் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறியத்தருவது யாதெனில்.

பதிவாளர் நாயக திணைக்களத்தின் எழுதப்பட்ட அதிகாரி மற்றும் அற்றோனித் தத்துவ ஆவணத்தில் 1940 ஆம் அத்தியாயத்தில் 32 ஆம் பதிவேட்டில் 189 ஆம் இலக்க தினக்குறிப்பேட்டின் கீழ் 1999.07.09 ஆம் திகதி எழுதி பதிவுசெய்யப்பட்டதுமான கொழும்பில் பிரசித்த நொத்தாரிசு திருமதி. ரோஷினி ஜயசுந்தர என்பவரினால் 2017.02.06 ஆம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இலக்கம் 694 உடைய அற்றோர்னி தத்துவத்தின் மூலம் என்னால் இல. 12, எபென்சர் பிளேஸ், தெஹிவளை என்ற இடத்தில் வசிக்கும் கயனி தரங்கா டி சில்வா மற்றும் (தேசிய அடையாள அட்டை இல. 688050324V) என்பவரை எனது சட்டரீதியான அற்றோர்னி தத்துவதாரியாக நியமிக்கப்பட்டிருந்தார் அந்த 694 இலக்கத்தைக் கொண்ட அற்றோனித் தத்துவத்தை இதிலிருந்து இரத்துச்செய்கிறேன் எனவும் இதற்கு பிறகு அது செல்லுபடியற்றது எனவும் மேலும் மேற் குறிப்பிட்ட கயனி தரங்கா டி சில்வா என்பவரினால் இன்று முதல் என் சார்பாக செய்யப்படும் அனைத்து செயல்களுக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என்றும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுஜாயி அசோக சமரசேகர அதுலத்முதலி வேறுபெயர் சுஜாயி அசோக சமரசேகர டின்டோ




### பாராளுமன்றத்தைப் பார்வையிடவந்த

## பாடசாலை மாணவர்கள் சபாநாயகரைச் சந்தித்தனர்

பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்காக நேற்று (01) வருகை தந்த மாத்தறை சுஜாதா வித்தியாலய மாணவ மாணவியருக்கு சபாநாயகரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இந்த மாணவர்கள் சபாநாயகருடன் சிநேகபூர்வ கலந்துரையாடலில் கலந்து கொண்டு தெளிவுபடுத்தல்களையும் பெற்றுக் கொண்டனர்.

பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறும் தினங்களில் பாராளுமன்றத்தைப் பார்வையிடுவதற்கும் பாராளுமன்ற விவாதங்களைப் பார்வையிடுவதற்கும் பாடசாலை மாணவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவது தொடர்பில் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய பாராளுமன்றத்தில் உள்ள பொதுமக்கள் கலரியிலிருந்து பாராளுமன்ற விவாதங்களைப் பார்வையிடப் பாடசாலை மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. எனவே, பாடசாலை அதிகாரிகள் தமது விண்ணப்பத்தை படைக்கலசேவிதருக்குக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் (0112777473/ 0112777335) அல்லது WWW.parliament.lk என்ற இணையவழியூடாகச் சமர்ப்பிக்க முடியும்.

## பாராளுமன்ற உறுப்பினர்களின் காப்புறுதியை அதிகரிக்கக்கூடாது

பா.நிரோஸ்

பாராளுமன்ற உறுப்பினர்களின் காப்புறுதித் தொகையை நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு அதிகரிக்கக்கூடாதென அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் அமைச்சருமான மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வைத்திய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது 2 இலட்ச ரூபாய் வரையில் காப்புறுதி வழங்கப்படுகிறது. இக்காப்புறுதி தொகையை அதிகரிப்பதற்கே சபாநாயகர் யோசனை முன்வைத்துள்ளார் என்று நினைக்கிறேன்.

எவ்வாறாயினும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் காப்புறுதி தொகையை அதிகரிக்கக்கூடாது என்பதே எனது தனிப்பட்ட கருத்து.

அரசாங்கம் என்கிற ரீதியில், இது தொடர்பில் இறுதித் தீர்மானங்கள் எட்டப்படவில்லை. இந்த விடயம் யோசனை மட்டத்திலேயே இருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் மட்டுல்லாது நாட்டிலுள்ள அனைத்து மக்களையும் பாதுகாப்பதற்கான காப்புறுதி அவசியம் எனவும் தெரிவித்தார்.

## ஸ்ரீ லங்கன் விமான சேவையை மறுசீரமைக்க வேண்டும்

### அரசாங்கத்தின் நிலைப்பாடு அதுவே

பா.நிரோஸ்

ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனத்தை விரைவாக முழுமையாக மறுசீரமைக்க வேண்டும் என்கிற நிலைப்பாட்டிலேயே முழு அமைச்சரவையும் இருப்பதாக அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று (01) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனத்தை மறுசீரமைக்க வேண்டுமென துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அமைச்சரவைக்கு யோசனை ஒன்றை முன்வைத்துள்ளார்.

இதன்படி, ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனத்தை மட்டுமல்லாது அதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் மறுசீரமைக்க வேண்டுமென்றே யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்றார்.

## இலை, குழைகளை உண்ணும்

### நிலை இன்னும் வரவில்லை

பா.நிரோஸ்

நாடு முழுவதிலும் உணவுப் பிரச்சினை இருக்கிறபோதிலும் இலை, குழைகளை உண்ணும் நிலைக்கு மக்கள் இன்னும் வரவில்லை. அந்த நிலைக்கு நாட்டை கொண்டுச் செல்லவும் மாட்டோம் என அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் உணவுப் பிரச்சினை இருக்கிறது. அதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அதற்காக பட்டினியால் இலை, குழைகளை சாப்பிடும் நிலைக்கு நாடு வரவில்லை. அந்த இடத்துக்கு நாட்டைக் கொண்டு செல்லவும் இடமளிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

திம்புலாகல பிரசேத்தில் உள்ள எட்டு கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதை நிறுத்திவிட்டதாகவும், இலை, குழைகளை சாப்பிடுவதாகவும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. இது தொடர்ந்து நாம் ஆராய்ந்தோம். எனினும் அப்படியான பிரச்சினைகள் திம்புலாகலயில் இல்லை எனவும் தெரிவித்தார்.

## மின்னல் தாக்கத்தில் ஒருவர் பாதிப்பு

எஸ்.கணேசன்

பண்டாரவளை, எல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட குருந்துவத்தை பகுதியில் நேற்று முன்தினம் (31) மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இரண்டு குடியிருப்புகளுக்கு பகுதி அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. அவ்விரு குடியிருப்புகளைச் சேர்ந்தவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது, குறித்த வீடுகளில் உள்ள பெறுமதிமிக்க மின்சாதனப்பொருட்கள் சேதமடைந்துள்ளதோடு, வீட்டு மின் இணைப்புகளும், வீட்டு உடமைகளும் சேதம் அடைந்துள்ளன. அத்தோடு, வீட்டின் சுவர்களும் சேதமடைந்துள்ளன.

மேலும், விபத்தின் பின்னர் எல்ல பொலிஸார், இராணுவத்தினர், பிரதேச செயலக அதிகாரிகள், மாவட்டச் செயலக அதிகாரிகள், அனர்த்த முகாமைத்துவ பிரிவு அதிகாரிகள் ஆகியோர், பாதிக்கப்பட்ட வீடுகளுக்குச் சென்று பார்வையிட்டு சேத விவரங்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.







# அக்கரைப்பற்றில் டெங்கு தடுப்பு நடவடிக்கை தீவிரம்

எம்.எஸ்.எம் ஹனீபா

அக்கரைப்பற்று சுகாதார வைத்திய திகாரி பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் எப்.எம்.ஏ காதர் நேற்று (01) தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில், பருவகால மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் டெங்கு நுளம்பு பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட்டு,



வீடுகளில் தேங்கியுள்ள குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி, டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு இடம் கொடுக்காத வகையில் துப்புரவாக தமது இடங்களை வைத்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

தென்னம் குரும்பை, யோகட் கப், வெற்று போத்தல்கள், வெற்று டயர்கள், பொலித்தின் கழிவுகள் போன்ற கழிவுகளை முறையாக அகற்ற வேண்டுமெனவும் டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான வெற்றுக்காணிகளை வைத்திருப்பவர்கள் இரண்டு வார காலத்துக்குள் துப்புரவு செய்ய வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

டெங்கொழிப்பு தொடர்பான ஆலோசனைகள் தேவைப்படும் பட்சத்தில் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாமெனவும் இது தொடர்பாக ஒலி பெருக்கி, துண்டுப்பிரசுரங்கள் ஊடாக பொது அறிவித்தல் விடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

பொம்மைவெளியில் ஹெரோயின் விற்கும் பெண்ணை

# பொலிஸார் கைது செய்யவில்லை என குற்றச்சாட்டு

எம். றொசாந்த்

வடக்கு மாகாணத்தில் உயிர்கொல்லி போதை வியாபாரிகள் தொடர்பில், பொதுமக்கள், பொலிஸாருக்கு தகவல் வழங்கினால், பொலிஸார் தகவல் வழங்கியவர்களைக் காட்டிக்கொடுக்கின்றனர் என்று, மக்கள் குற்றம் சுமத்துவதாக நீதி அமைச்சர் விஜயதாஸ நேரடியாகப் பொலிஸாரிடம் தெரிவித்திருந்தார்.

வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நீதி அமைச்சர் விஜயதாஸ தலைமையில் நேற்று முன்தினம் (31) நடைபெற்ற கலந்துரையாடலில் இதுபோன்ற பல்வேறு விடயங்கள் பேசப்பட்டன. அங்கு பேசப்பட்ட விடயங்கள் வருமாறு:

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் உளவள ஆசிரியர்கள் 54 பேர் மாத்திரமே கடமையாற்றுகின்றனர். இவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும்.

உயிர்கொல்லி போதைப்பொருள் வியாபாரிகள், தம்மை பொலிஸார் கைது செய்வதிலிருந்து தப்பிக்க இரண்டாயிரம் ரூபாய்க்கு தகவலாளிகளை அமர்த்தியுள்ளனர்.

பொம்மைவெளி பகுதியில் பெண் ஒருவர் தொடர்ச்சியாக ஹெரோய்ன் விற்பனையில் ஈடுபடுகின்றார் என்று பொலிஸார் அறிந்திருந்தும் அவரைக் கைது செய்யவில்லை.

இதுகுறித்து, நீதி அமைச்சர் விஜயதாஸ பின்வரும் ஆலோசனையை வழங்கியிருந்தார். உயிர்கொல்லி போதைப்பொருள் வியாபாரிகள் என்பது உறுதியாகத் தெரிந்தால், அவர்களைக் கைது செய்ய ஆதாரம் இல்லையென்றால் விசாரணை என்று பொலிஸ் நிலையத்துக்கு தொடர்ச்சியாக பல மணிநேரம் அழையுங்கள் என்றார்.

## ‘தேசாபிமானி’ விருது

எச்.எம்.எம் பர்ஸான்

ஓட்டமாவடியைச் சேர்ந்த எம்.எம்.எம் அஸீஸ் ஆசிரியர் ‘தேசாபிமானி ’விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை சமாதான நீதாவான்கள் பேரவை, கொழும்பு சர்வதேச பண்டார நாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில், அண்மையில் நடத்திய நிகழ்வின் போதே இவருக்கு ‘தேசாபிமானி’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவர், மீராவோடை உதுமான் வித்தியாலயத்தில் பிரதி அதிபராக கடமையாற்றி வருகின்றார்.



விவசாயம், வெற்றுக் காணிகளை

## மக்களுக்கு உடன் வழங்க வேண்டும்

நூருல் ஹுதா உமர்

பொருளாதாரம், உணவு பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக விவசாயம், வெற்றுக் காணிகளை உடன் மக்களுக்கு வழங்க, அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான அம்பாறை மாவட்ட வலையமைப்பின் இணைப்பாளர் எம்.ஐ றியாழ் தலைமையில் காரைதீவு பல்நோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுத்தட்டுப்பாட்டை குறைப்பதற்காக அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்ட திட்டமான பாரம்பரிய விவசாய மற்றும் வெற்றுக்காணிகளை



விவசாய செய்கைகளுக்காக விவசாய செய்கையில் ஆர்வமுள்ளவர்களுக்கு வழங்க அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இதனை காலதாமதம் ஏற்படுத்தாது உடன் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இந்தக் கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.

அக்காணிகளை விவசாய செய்கையில் ஆர்வமுள்ளமக்களுக்கு வழங்குவதற்கான சட்ட ரீதியான அறிவுறுத்தல்களையம் அரச வர்த்தமாணி மற்றும் சுற்றிக்கையையும் அரசு உடன் வெளியிடவேண்டும். இதன் மூலம் நாட்டில் உணவு உற்பத்திகளை அதிகரிக்க வாயப்புள்ளது எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

மன்னார் நகர சபை அதிரடி நடவடிக்கை

## நிலுவைக் கட்டணத்தை செலுத்த காலஅவகாசம் கோரிய இ.போ.ச மன்னார் சாலை

எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் நகர பஸ் நிலையம், மன்னார் நகர சபையின் கட்டுப்பாட்டின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், இலங்கை போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலையின் பஸ்களுக்கான மாதாந்த கட்டணத்தை மன்னார் நகர சபைக்கு செலுத்தாத காரணத்தால், நேற்று (01) காலை கட்டணத்தை அறவிட, மன்னார் நகர சபை களத்தில் இறங்கியிருந்தது.

குறித்த பஸ் நிலையத்தில், மன்னார் தனியார் பஸ்களும் அரச பஸ்களும் போக்குவரத்து சேவையை மேற்கொண்டு வருகின்றன. இந்த நிலையில், அரச பஸ் நிர்வாகம், இதுவரை எவ்வித பணமும் செலுத்தவில்லை.

இந்த நிலையில், நேற்று காலை 5.45 மணி அளவில், மன்னார் நகர சபையின் தவிசாளர் ஞா.அன்ரனி டேவிட்சன், நகர சபையின் செயலாளர், உறுப்பினர்கள், ஊழியர்கள்



இணைந்து, மன்னார் பஸ் நிலையத்தின் இரண்டு நுழைவாயில்களையும் மூடி, பஸ்கள் நாளாந்த நுழைவு கட்டணமாக 100 ரூபாய் செலுத்தி டிக்கட்டைப் பெற்று உள்ளே செல்லப் பணித்தனர். இதனால், மன்னார் சாலைக்கு சொந்தமான பஸ்கள், கட்டணம் செலுத்தாது வீதி ஓரங்களில் தரித்து நின்றன.

இதன் போது, வருகை தந்த இ.போ.ச அதிகாரிகள் நிலுவையில் உள்ள பணத்தை செலுத்த கால அவகாசம் வழங்குமாறும், இனி வரும் காலங்களில் மாதாந்த கட்டணத்தை முறையாகச் செலுத்துவதாகவும் தெரிவித்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மன்னார் நகர சபை, போக்குவரத்து சேவையை தொடர்ந்து முன்னெடுக்க அனுமதி வழங்கியது.



## ஓ.எம்.பியின் செயற்பாடுகளை எதிர்த்து போராட்டம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நடமாடும் சேவை நடைபெற்ற இடத்தின் முன்பாக, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (ஓ.எம்.பி) செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம், நேற்று (01) வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், அரசுக்கும் குறிப்பாக காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (ஓ.எம். பி) செயற்பாடுகளுக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும் பல்வேறு கோசங்களை எழுப்பினர். காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் இருந்து கடிதங்கள் கிடைக்கப் பெற்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், குறித்த அலுவலகத்துக்கு பதிவுக்கு சென்றபோது, இப் போராட்டத்தை வழிநடத்தபவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டதையடுத்து, பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது. பின்னர் விரும்பிய மக்கள் சென்று பதிவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

தேற்றாத்தீவு பொதுநூலகத்துக்கு

## பொதுமக்களால் 2,500 நூல்கள் அன்பளிப்பு





தேற்றாத்தீவு பொது நூலக வாசக வட்டமும் பொதுமக்களும் இணைந்து நடத்திய நூலகத்துக்கு நூல்கள் கையளிப்பு நிகழ்வு வெள்ளிக்கிழமை (28) நடைபெற்றது. தேற்றாத்தீவு பொதுமக்களால் கொள்வனவு செய்யப்பட்ட 2,500 மேற்பட்ட நூல்கள், சஞ்சிகைகள் அடங்கிய பொதிகளை களுதாவளை பிரதேச சபையின் தவிசாளர் ஞா. யோகநாதன், களுதாவளை பிரதேச சபையின் செயலாளர் ச. அறிவழகன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் எஸ். குகநேசன் ஆகியோரிடம் இதன்போது கையளிக்கப்பட்டன. தேற்றாத்தீவு கிராமத்தில் உள்ள வீடுகளில் வாசிப்பு பழகத்தை ஊக்குவிக்கும் உதாரண புருசராகத் திகழும் ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் ஆர். திருஞானசம்பந்தமூர்த்தி, தேற்றாத்தீவு பொதுநூலகத்தை அதிகநேரம் பயன்படுத்தி வாசிப்புப்பழக்கத்தை மேம்படுத்தும் த. தேவமனோகரன் ஆகியோருக்கு அதிதிகளால் பொன்னாடை போர்த்தியும் நினைவுப்பரிசு வழங்கியும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

க. விஜயரெத்தினம்







## கோவிலுக்கு சென்றவர் உயிரிழப்பு

எம். றொசாந்த்

கோவிலுக்கு சென்றவர் வழுக்கி விழுந்து உயிரிழந்துள்ளார். மட்டுவில் தெற்கை சேர்ந்த சண்முகலிங்கம் கேசவநாதன் (வயது 52) என்பவர், தனது வீட்டுக்கு அருகிலுள்ள கோவிலுக்கு சென்று, அங்குள்ள கால் கழுவும் இடத்தில் கால் கழுவும் போது , வழுக்கி விழுந்துள்ளார்.

அதன் போது பின்தலையில் காயம் ஏற்பட்டு, சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

முல்லைத்தீவில் தொடரும் கன மழை:

## மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக, மாவட்டத்தின் தாழ் நிலப்பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி நிற்கும் நிலையில், தொடர்ந்தும் மழை பெய்து வருகிறது.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், தாழ்நிலப் பகுதி மக்களின் வீடுகள், கடைகள் என்பவற்றுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளதோடு உரிய வடிகாலமைப்பு இல்லாமையால், வெள்ளம் வடிந்தோடாமல் தேங்கிநிற்கின்றது. புதுக்குடியிருப்பு



நகரிலும் உரிய வடிகாலமைப்பு இல்லாமையால் கடைகள், வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

அத்துடன், வீட்டுத்தோட்டம் கிடைக்கப்பெறாதவர்களும் கிடைத்தும் உரிய நிதிகள் கிடைக்கப் பெறாமல் இடைநடுவில் வீட்டு வேலைகளை நிறுத்தி, தற்காலிக வீடுகளில் வாழும் குடும்பங்கள், இந்தக் கன மழையால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

## கலாபூசனம் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

க. அகரன்

2022ஆம் ஆண்டுக்கான கலாபூசனம் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் வவுனியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள், விண்ணப்ப படிவங்களை பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் பெற்று, பூரணப்படுத்ததப்பட்ட விண்ணப்ப படிவங்களை 04/11/2022ஆம் திகதிக்கு முன்னர் கலாசார உத்தியோகத்திரிடம் சமர்ப்பிக்குமாறு வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## “நூலகங்களை திறப்பதில் பிரயோசனம் இல்லை; பயன்படுத்த வேண்டும்”

பைசல் இஸ்மாயில்

தேசிய வாசிப்பு வாரத்தையொட்டி குச்சவெளி வடலிக்குளம் பிரதேசத்தில் புதிய நூலகத்தை குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ. முபாறக் திறத்து வைத்து அப்பிரதேச மக்களிடம் கையளித்தார்.

குச்சவெளி பிரதேச சபை செயலாளர் மா. மாலினி அசோக்குமார் தலைமையில் நேற்று முன்தினம் (31) நடைபெற்ற விழாவில் பிரதேச மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர். இங்கு தவிசாளர் ஏ.முபாறக் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது;

நூலகங்களை பெயரளவில் திறந்து வைப்பதில் எவ்விதப் பிரயோசனமும் இல்லை. அதனை முழுமையாக நாம் பயன்படுத்த முயல வேண்டும். எம்மிடத்தில்



வாசிப்புப் பழக்கத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். அது மனிதனை பரிபூரணமாக்குகிறது.

வாசிப்புப் பழக்கம் குறைந்து வருவதற்கு பெற்றோருக்கு வீட்டில் புத்தகங்களை படிக்கும் பழக்கம் இல்லாததால், பிள்ளைகளும் அப்படியே மாறிவிடுகின்றனர். இதிலிருந்து மீண்டு, வாசிப்புப் பழக்கத்தை எம்மிடத்தில் ஏற்படுத்திக்கொள்ள முயல வேண்டும் என்றார்.



## அசார் ஆசிரியருக்கு கௌரவம்

எப். முபாரக்

கிராமிய பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி தொண்டு நிறுவனம் (ரெக்டோ) நிறுவனத்தின் தலைவரும் கந்தளாய் ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபருமான ஜே. எம். அசார் ஆசிரியரால் திருகோணமலை மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு செய்து வருகின்ற பல்வேறுபட்ட சமூக நலன் திட்டங்களை பாராட்டியும், அவர்களால் கல்வி வளர்ச்சிக்காக எடுக்கப்படும் முன்னெடுப்புகளை நினைவு கூர்ந்தும் நன்றி பாராட்டியும் குடாக்கரை சமூகம் சார்பாக ஜே.எம். அசார் ஆசிரியரை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உபதவிசாளர் முஹம்மட் நௌபர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

## சட்டத்தரணி ஜோண்தாஸனின் பெயரில் வீதி

எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தின் மூத்த சட்டத்தரணியும் சமூக சேவையாளருமான சட்டத்தரணி அமரர் அம்புரோஸ் சைமன் ஜோண்தாசனின் பெயரில் மன்னாரில் நேற்று (01) வீதிக்கு பெயர் சூட்டப்பட்டு, பெயர்ப்பலகை வைபவ ரீதியாகத் திறந்து



வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபை தவிசாளர் ஞா. அன்ரனி டேவிட்சன், நகர சபையின் செயலாளர், உறுப்பினர்கள், சட்டத்தரணிகள் கலந்துகொண்ட இந்நிகழ்வில், மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி, முதலாம் குறுக்குத் தெருவுக்கு ‘அமரர் அம்புரோஸ் சைமன் ஜோண்தாசன்‘ எனப் பெயர் சூட்டப்பட்ட பெயர்ப்பலகையை ஜோன்தாசனின் புதல்வன் சிரேஷ்ட சட்டத்தரணி ஜோண்தாசன் துசித் வைபவ ரீதியாக திரை நீக்கம் செய்துவைத்தார்.



# மூளைச்சாவு அடைந்தவரின் சடலம் ஹெலியில் வந்தது

எம். செல்வராஜா

பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது, மூளைச்சாவு அடைந்த நபரின் சடலத்தை, இலங்கை விமானப்படையினர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு ஹெலிக்கொப்டரின் மூலமாக அவசரமாக எடுத்துச் சென்றுள்ளனர்.

இலங்கை விமானப்படைக்கு சொந்தமான பெல் 412 ரக ஹெலிக்கொப்டர் அம்புலன்ஸ்களாக மாற்றப்பட்டு, ஒக்டோபர் 31ஆம் திகதியன்று அவரது சடலம் எடுத்துச் செல்லப்பட்டது.

இலங்கை விமானப்படைக்கும் சுகாதார அமைச்சுக்கு இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரமே இச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

இந்த மூளைச்சாவு அடைந்த நபரின் முக்கிய உடல் உறுப்புகளை ஏனைய நோயாளர்களுக்கு தானமாக வழங்குவதற்கு, அவரது உடல் அவசரமாகக் கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

# அவதானமாக இருங்கள்

நீரேந்தும் பகுதிகளில் தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழையால், அந்தந்தப் பிரதேசங்களுக்கு அண்மையில் வாழ்வோர் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற வானிலை இன்னும் சில நாள்களுக்கு நீடிக்குமென வளிமண்டல திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மலையக பகுதிகளைப் பொறுத்தவரையில் ஆங்காங்கே மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. பனிமூட்டத்தால் வீதிகள் தெளிவாகத் தெரிவதில்லை. அத்துடன், போக்குவரத்திலும் ஒருவகையான மந்தநிலையே காணப்படுகின்றது.

இடையில் விட்டிருந்த மழை, ஒக்டோபர் 31ஆம் திகதி இரவு முதல் மீண்டும் பலத்த மழையாக பெய்யத்தொடங்கியுள்ளது. பனிமூட்டங்கள் பிரதான வீதிகளை மறைத்து இருப்பதால், வானங்களைச் செலுத்திச் செல்வோர் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மிகமோசமான வானிலை நிலவும் இக்காலப்பகுதியில் வாகனங்களைச் செலுத்தவேண்டுமாயின், வாகனத்தின் முன் விளக்குகளை ஒளிரவிட்டுக்கொண்டு பயணிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நீரேந்தும் பிரதேசங்களில் தொடர்ச்சியாக மழை பெய்வதால், கெனியன், லக்ஷபான, நவ லக்ஷபான, பொல்பிட்டிய, விமலசூரிய ஆகிய மின் உற்பத்தி நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்துள்ளது என அந்தந்த நீர்த்தேக்கங்களுக்கு பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.





# கூரையை பிரித்து கடையில் கைவரிசை

நவி

நகரங்களில் உள்ள கடைகளை உடைத்து, பொருட்கள் மற்றும் பணத்தை கொள்ளையிட்டு செல்லும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

நகரங்களில் இருக்கும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தற்போது வியாபாரம் நிறைவடைந்ததன் பின்னர், நிலையத்தை மூடிவிட்டு வந்த பின்னர், இரவு நேரங்களில் அச்சத்துடனே இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

நகரங்களில் இருக்கும் வியாபார நிலையங்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லாத காரணமாகவே இவ்வாறு அச்சத்துடன் இரவை கழிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் சிலர் தெரிவித்தனர்.

இந்நிலையில், கலஹா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெல்தோட்டை நகரில் வியாபாரம் நிலையமொன்றின் கூரையைப் பிரித்து அதனூடாக உள்ளே இறங்கி கொள்ளையிட்ட சம்பவம் கடந்த 30 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது.

பணம், பொருட்கள் மற்றும் அங்கு வைக்கப்பட்டிருந்த நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன என தெரியவருகின்றது. கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னரும் இதேபோன்று, தங்கம், வெள்ளி விற்பனை செய்யும் நிலையத்திலும் கூரையை பிய்த்து கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் தங்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனத் தெரிவித்த கலஹா பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# கிடைக்காவிடினும் குறைத்துள்ளோம்

ரஞ்சித் ராஜபக்‌ஷ

இறக்குமதி செய்யப்படும் கோதுமை மா குறைந்த விலையில் தங்களுக்கு கிடைக்காவிடினும், 450 கிராம் நிறையைக் கொண்ட பாண் இறாத்தல் ஒன்றின் விலையை 10 ரூவாயால் குறைத்து, நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றோம் என ஹட்டன் நகரிலுள்ள பேக்கரி சங்க உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகளையும் 10 ரூபாயால் குறைத்துள்ளோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

பாண் உற்பத்திக்கான மூலப்பொருட்கள் பலவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. கோதுமை மாவும் குறைந்த விலையில் கிடைக்கவில்லை. எனினும், பாணின் விலையை குறைத்துள்ளோம். அவ்வாறு விலையை குறைத்தமையால், இந்தத் தொழிற்றுறையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் பாரிய சிரமங்களுக்கு தாங்கள் முகங்கொடுப்பதாகவும் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

பாணின் விலையை 10 ரூபாயால் குறைத்தமையால் தாங்கள் திருப்தியடையமுடியாது என்றும், கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்ட போதெல்லாம் பாணின் விலையும் அதிகரிக்கப்பட்டன என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.



# குப்பைகளால் செலவு அதிகம்

சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன்-டிக்கோயா நகர சபை அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் நாளாந்தம் சேரும் குப்பைகளை கொட்டுவதற்கு உரிய இடமொன்று இன்மையால் நகர சபை பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது என நகர சபை தவிசாளர் சடயன் பாலச்சந்திரன் தெரிவித்தார்.

நகர சபை அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் நாளொன்றுக்கு நான்கு தொன் குப்பைகள் சேர்கின்றன. அந்தக் குப்பைகளைக் கொட்டுவதற்கு உரிய இடமொன்று இல்லை.

இது நீண்டநாள் பிரச்சினையாகும். சேரும் குப்பைகளை ரிக்காட்டன் அல்லது தலவாக்கலை பிரதேசத்துக்கு எடுத்துச் செல்லவேண்டும். நாளாந்தம் எடுத்துச் செல்வதற்கு கூடுதல் செலவாகின்றது என்றார்.

ஹட்டன்-டிக்கோயா நகர சபை குப்பைகளை கொட்டுவதற்கு குடாகம பிரதேசத்தில் ஓர் இடமிருந்தது. எனினும், நீண்ட வருடங்களுக்கு முன்பிருந்த நகர சபைத்தலைவர் அவ்விடத்தை வேறு நபர்களுக்கு கொடுத்துள்ளார். இதனால் அவ்விடமும் இல்லாமல் போய்விட்டது என்றார்.

சுற்றியிருக்கும் பெரும் தோட்டங்களில் இடங்களைத் தேடினாலும் பலரும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் என்றார்.

# லிற்றோ காஸ் பற்றாக்குறை

சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன் நகரத்திலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் லிற்றோ காஸ் பற்றாக்குறை நிலவுவதாகவும் இதனால் தாங்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

காஸ் விலை குறையுமென எதிர்பார்க்கப்பட்டிருக்கும் நிலையில், முகவர்கள் காஸ் சிலிண்டர்களை கொள்வனவு செய்யாமல் விட்டுள்ளனர். இதனால், தட்டுப்பாடு நிலவுவதாக அறியமுடிகின்றது.

இதேவேளை, கடந்த சில மாதங்களாக இந்தப் பிரதேசத்தில் மண்ணெண்ணை இல்லை. இந்நிலையில் காஸ் தட்டுப்பாடும் நிலவுவதால், உணவு சமைத்துக்கொள்வதில் கடுமையான சிரமங்களை எதிர்கொள்வதாகவும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

# புதிய நியமனம்

எம். செல்வராஜா

ஊவா மாகாண சபையின் பிரதான அமைச்சுகளில் ஒன்றான நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, காணி, மின்சக்தி, கட்டுமானம், கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் புதிய செயலாளராக எச்.எம். நந்தசேனவை ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம் முஸம்மில் நியமித்துள்ளார்.

அவ்வமைச்சின் பிரதான செயலாளராக பணியாற்றிய திருமதி சந்தியா அபன்வெல ஓய்வு பெற்றதன் பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே ஊவா மாகாண பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) ஆகக் கடமையாற்றிய எச்.எம். நந்தசேன புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊவா பரணகம, யாலகமுவ கிராமத்தில் பிறந்து, அங்கேயே தனது பள்ளிப் படிப்பை ஆரம்பித்த அவர், மஸ்பன்ன மாகாண வித்தியாலயம், கண்டி தர்மராஜ வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவராவார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மேலாண்மை (அரசு) படிப்பை நிறைவு செய்ததன் பின்னர் அவர் களனி பல்கலைக்கழகத்தில் பட்டதாரி பட்டம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



# கோப்பி கன்றுகள் வழங்கிவைப்பு

எஸ். கே. குமார்

நுவரெலியா மாவட்டத்திலுள்ள வலப்பனை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கலபொட கிராம உத்தியோகஸ்தர் பிரிவில் கோப்பி பயிர்ச் செய்கைக்காக, கோப்பி கன்றுகள், கோப்பி விதைகள் இலவசமாக வழங்கிவைக்கப்பட்டன.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட, இவற்றை நேற்று (01) செவ்வாய்கிழமை வழங்கி வைத்தார்.

ஜப்பான் நாட்டின் ‘கியோட்டோ’ நிறுவனத்தின் அனுசரணையுடன் வலப்பனை, கலபொட கிராம சேவைப் பிரிவில் 30,000 கோப்பிச் செடிகளை உற்பத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் கோப்பி செடிகளை பயிரிடுவதற்காக இவை இலவசமாக வழங்கிவைக்கப்பட்டன.

செயலாளர் நந்தன கலபட வழிகாட்டலின் கீழ், கோப்பி வலயத்தை மீண்டும் சக்தியூட்டும் திட்டம் மாவட்டத்தின் பல கிராம சேவைப் பிரிவுகளில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், வலப்பனை பிரதேச செயலாளர் செல்வி ஷாலிகா லிடகும்புர உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



# விழிப்புணர்வு









பி.கேதீஸ்

போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தையொட்டி தலவாக்கலை பொலிஸ் நிலையத்தின் ஊடாக கிறேட்வெஸ்டன் பாடசாலையில் தரம் 10,11 வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

அதன் பின்னர் பாடசாலை வளாகத்தில் மரக் கன்றுகள் நாட்டப்பட்டன. இந்நிகழ்வில் தலவாக்கலை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மருதநாயகி, யோகரட்ணம், காந்தரூபன்,பண்டார மற்றும் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம் பாரிஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தன்னியக்க வான்கதவுகள் திறந்து மூடிக்கொண்டன


ஷேன் செனவிரத்ன

மலையகத்தில் நீரேந்தும் பிரதேசங்களில் பெய்துவரும் அடைமழை காரணமாக, விக்டோரியா நீர்த்தேகத்தின் தன்னியக்க வான்கதவுகள் இரண்டும் நேற்று (01) அதிகாலை 4 மணியளவில் திறந்துகொண்டன.

சுமார் நான்கரை மணிநேரம் நீரை வெளியேற்றியதன் பின்னர், அவ்விரண்டு வான்கதவுகளும் மூடிக்கொண்டன.

722 மில்லியன் கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட விக்டோரியா நீர்த்தேகத்தில், தன்னியக்கமாகக் திறந்துகொண்ட வான் கதவுகள் இரண்டின் ஊடாக வினாடிக்கு 160 கனமீற்றர் நீர், ரந்தெனிகல நீர்த்தேக்கத்துக்கு திறந்துவிடப்பட்டது என நீர்த்தேகத்துக்குப் பொறுப்பான பொறியியலாளர் வந்த எஹேலபிட்டிய தெரிவித்தார்.

இந்நிலையில், ரந்தெனிகல நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 80 சதவீதம் வரையிலும் அதிகரித்துள்ளது என மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.



# புதினம் பார்க்கும் நேரமல்ல; அவதானமாகவே இருப்போம்

இயற்கையின் மீதான மனிதர்களின் ஆக்கிரமிப்பால் சீற்றமெடுக்கும் இயற்கையானது, பல சந்தர்ப்பங்களில் கோரத்தாண்டவம் ஆடுவிடும். இதனால் உயிரிழப்புகளும், உடமைகள் இழந்து நிர்க்கதியாகிய நிலைமையும் ஏற்பட்டுள்ளன.

நீரேந்தும் பிரதேசங்களில் தொடர்ச்சியாக இடைவிடாது மழை பெய்யுமாயின், நீர்நிலைகளை அண்மித்து வாழ்வோரும் ஆற்றங்கரையோரங்களில் இருப்போரும் மிகமிக அவதானமாக இருக்கவேண்டும். அத்துடன், மண்சரிவுகள் ஏற்படக்கூடிய அபாய வலயங்கள் குறித்தும் தெரிந்துவைத்திருப்பது அவசியம்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களில் சிக்கிக்கொண்டு மரணமடைந்தவர்களைத் தவிர, புதினம் பார்க்கச் சென்று மரணித்தோரும் உள்ளனர். ஆகையால், பாதுகாப்பற்ற இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டுவிட்டால் மீட்பு பணியாளர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு வழிவிடவேண்டும்.

தற்போது பெய்து கொண்டிருக்கும் அடைமழை, இன்னும் சில நாள்களுக்கு நீடிக்குமென வானிலை அவதான நிலையம் எதிர்வுகூறியுள்ளது. மலையகத்தில் பனிமூட்டம் அதிகரித்து, போக்குவரத்துக்கு பெரும் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளது.

பனிமூட்டம் அதிகரித்துள்ளதால் வாகன சாரதிகள், முன் விளக்குகளை ஒளிரவிட்டு, வாகனத்தைச் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். எதிரே வரும் வாகனங்களுக்கு இதனூடாக சமிக்ஞை கொடுப்பது மட்டுமன்றி, விபத்துகள் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

மின்னலின் தாக்கும் சந்தர்ப்பங்களில் மின்சார உபகரணங்களைப் பயன்படுத்துவதை முற்றாகத் தவிர்த்தல் நல்லது. இல்லையேல் பாதுகாப்பான ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்துகொள்ளவேண்டும். அதன் போது, மின்னிணைப்பை தற்காலிகமாக துண்டித்து வைத்திருப்பதே சாலச் சிறந்தது.

மிகமுக்கியமான சந்தர்ப்பங்களைத் தவிர, ஏனையே நேரங்களில் வீடுகளிலும் பாதுகாப்பான இடங்களிலும் தங்கியிருக்கவேண்டும். தேவையில்லாத வகையில் பொது வெளியில் நடமாடுவதையும் கூட்டம் சேர்வதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

அதுமட்டமன்றி, பின்தங்கிய பிரதேசங்களிலிருந்து நகரங்களுக்கு வரவேண்டுமாயின் நீரோடைகள், சிற்றாறுகளைக் கடந்தே வரவேண்டும். மழைக்காலம் என்பதால், பாதுகாப்பற்ற முறையில் கடந்துவர முயற்சிக்கவே வேண்டாம். இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாகவும் கடந்தகாலங்களில் உயிரிழப்புகள் பல ஏற்பட்டன என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இயற்கையின் கோரத்தாண்டவத்தை எதிர்காலத்திலேனும் தவிர்க்க வேண்டுமாயின், இயற்கையின் மீதான சுரண்டலை, ஆக்கிரமிப்பை, முற்றுமுழுதாகக் கைவிடவேண்டும். இல்லையேல், பாரிய மண்சரிவுகள், காட்டாறு வெள்ளம், வெள்ளப்பெருக்கு, கட்டடங்கள் இடிந்துவிழுதல் உள்ளிட்டவற்றுக்கு முகங்கொடுத்தே ஆகவேண்டும்.

நாடு முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் மிகநெருக்கடியான நிலையில், பாதிக்கப்பட்டோருக்கு உடனடியாக நிவாரணங்கள் கிடைக்குமென எதிர்பார்க்கமுடியாது. அக்கம் பக்கத்திலுள்ளவர்கள், உறவினர்களிடம் கூட உதவிகளைக் கோரமுடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது.

இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் அழிவுகளைத் தவிர்க்கமுடியாது. ஆனாலும் புதினம் பார்க்கச் செல்கையில் ஏற்படும் வீணான அனர்த்தங்களை தவிர்க்கலாம். ஆகையால், அவதானமாக இருப்பதே அனைவருக்கும் நல்லது.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

ஆணவம் மிகையாகும் போது, மனிதர்களுக்குச் சரி எது, தவறு எது எனப் புலப்படுவதில்லை. அத்துடன் ஆணவக்காரர்கள், தங்களது தவறுகளை ஒத்துக்கொள்வதும் இல்லை. சாதாரண மனிதன் தெரிந்தும் தெரியாமலும் சிறு தவறுகளைச் செய்வதுண்டு.

ஆனால், அரசியல்வாதிகள் அப்படிப்பட்டவர்கள் அல்லர்! இவர்கள் தங்களின் டாம்பீகமான வாழ்க்கை என்றும் நிலைக்க வேண்டும் எனக் கருதுபவர்கள். தங்களின் பரம்பரை வளம் கொழித்து வாழ வேண்டும் என்னும் ஒரே காரணத்துக்காக எதையும் செய்வார்கள்.

பொதுவாக, ஒரு சில அரசியல்வாதிகளைத் தவிர, எல்லா அரசியல்வாதிகளும் தியாகிகள் அல்ல! கஷ்டப்படாமலே தலைவர்களானவர்கள் பலர், உலகெங்கும் உலாவித்திரிகின்றனர். இப்படி இருக்கும்போது ஏனையவர்களின் நிலை என்ன?

தவறான வழிமூலமே முன்னேற முடியும் எனப் பலர் நினைக்க ஆரம்பித்து விட்டனர். இதனாலேயே உலகம் தடம்புரளுகின்றது; போர் மேகம் சூழ்கின்றது. நாடுகள் பிரச்சினைகளுக்குள் உள்ளீர்க்கப்படுகின்றன. நீதி முக்கியமானது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# சட்டங்கள் நாட்டுக்கா, ஆட்சியாளர்களுக்கா?



எம்.எஸ்.எம் ஐயூப்

இரட்டைப் பிரஜாவுரிமையுள்ள பாராளுமன்ற தமிழ் உறுப்பினர்கள் எவராவது இருக்கிறார்களா? 21ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், சிலர் இந்தக் கேள்வியை எழுப்புகின்றனர். ஏனெனில் இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள், இனி பாராளுமன்றத்தில் இருக்க முடியாது.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம், ஒக்டோபர் 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 20ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு, இரண்டு வருடங்கள் பூர்த்தியாவதற்கு ஒரு நாள் முன்னதாகவே, அது நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்திருத்தத்துக்கு தமது அனுமதியை வழங்கும் வகையில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன திங்கட்கிழமை (31) அதில் கையொப்பமிட்டார். அத்தோடு அது நாட்டின் அடிப்படை சட்டத்தின் அங்கமாகிவிட்டது.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்தின் பிரதான அம்சம், இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பானதல்ல. ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் வகையில், அரசியலமைப்புச் சபையை மீண்டும் நிறுவி, அதன் கீழ் சுயாதீன ஆணைக்குழுக்களை ஸ்தாபிப்பதே அதன் முக்கிய நோக்கமாகியது. இரட்டைப் பிரஜாவுரிமை பற்றிய விடயம், ஓர் உதிரி விடயமாகவே அதில் சேர்க்கப்பட்டு இருந்தது.

ஆனால், இரட்டைப் பிரஜாவுரிமை பற்றிய விடயமே, அதன் முக்கிய அம்சம் என்பதைப் போல் அரசியல்வாதிகளும் ஊடகங்களும் கடந்த சில வாரங்களாக கருத்து வெளியிட்டு வந்தன. எனவே, அந்த அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, எல்லோரும் பாராளுமன்றத்தில் இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்களைத் தேட ஆரம்பித்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் அவ்வாறானவர்கள் பத்துப் பேர் இருப்பதாக, ஜாதிக்க ஹெல உருமய கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க கூறியிருந்தார். அதையடுத்தே சிலர், டயனா கமகே போன்ற சில எம்.பிக்களை சுட்டிக்காட்டி, அவர்கள் இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் என்று கூறி வருகின்றனர்.

வடக்கில், சில தமிழ் அரசியல்வாதிகளும் இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றுள்ளனர் என்றும் கூறப்பட்டு வருகிறது.

அவ்வாறானவர்கள் பாராளுமன்றத்தில் இருக்கிறார்களா என்று ஆராய்வது தமது கடமை அல்ல என சபாநாயகர் கூறியிருந்தார்.

அவ்வாறே, அது தமது கடமையல்ல என்றும், அவ்வாறானவர்கள் இருப்பதாக எவரிடமும் ஆதாரங்கள் இருந்தால், அவர்கள் அவற்றை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து சம்பந்தப்பட்டவர்களை பாராளுமன்றத்தில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தேர்தல்கள் ஆணையகத்தின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில், பாராளுமன்றத்தில் அவ்வாறானவர்கள் இல்லை என்று குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் திங்கட்கிழமை (31) தெரிவித்தது. அது பெரும்பாலும் சரியானதாகத் தான் இருக்க வேண்டும்.

ஏனெனில், ஒருவரைத் தவிர தற்போது நாடாளுமன்றததில் உள்ள அனைவரும், 2020ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேரதலில் தெரிவானவர்கள் ஆவார். எம்.பியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க, 2021ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி பிரதமராக நியமிக்கப்பட்டதன் பின்னர், அவரது இடத்துக்கு நியமிக்கப்பட்ட வஜிர அபேவர்தனவே அந்த ஒருவராவார்.

அந்தத் தேர்தல் நடைபெறும் போது, அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் அமலில் இருந்தது. அதன் கீழ், இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் தேர்தல்களில் போட்டியிடவோ, பாராளுமன்ற உறுப்பினராக இருக்கவோ முடியாது. எனவே, அவ்வாறானவர் எவரேனும் இப்போது பாராளுமன்றத்தில் இருந்தால், அவர் நிச்சயமாக தேர்தலின் போது, தாம் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர் என்பதை மறைத்துத் தான் வேட்பாளராக இருந்திருக்க வேண்டும்.

இரட்டைப் பிரஜாவுரிமை என்பதை மறைத்து, தேர்தலில் போட்டியிட்டு எம்.பியாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் விடயம் வெளியே வந்தால், அவர் தேர்தலுக்காக செலவழித்த கோடிக் கணக்கான பணம் வீணாகிவிடும். அவ்வாறான சூதாட்டத்தில் ஒருவர் ஈடுபடுவாரா என்பது சந்தேகமே. ஆனால், எந்தவொரு விடயம் தொடர்பாகவும் உத்தரவாதம் அளிக்கவும் முடியாது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்த மஹிந்தவின் இளைய சகோதரரான பசில் ராஜபக்ஷவை குறிவைத்தே, இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் தேர்தல்களில் போட்டியிடும் உரிமையை இரத்துச் செய்யும் சட்டம், கடந்த அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டது. அவருக்காகவே 20ஆவது திருத்தத்தின் மூலம் அது நீக்கப்பட்டது. அவருக்காகவே 21ஆவது திருத்தத்தின் மூலம் இப்போது மீண்டும் அத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

பசில் பெரும் ஊழல் பேர்வழி என்பது அநேகமானோரின் குற்றச்சாட்டாகும். அவர் மட்டுமன்றி ஊழல் பேர்வழிகள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் ராஜபக்ஷ குடும்பத்தினரையும் நாட்டில் பெரும்பாலான அரசியல்வாதிகளையும் அரசியலில் இருந்து ஒதுக்கி வைக்கக் கூடிய சட்டங்களை இயற்ற முடியும் என்றால் நல்லது தான்!

ஆனால், குறிப்பிட்ட நபர்களைக் குறி வைத்து அல்லது, தனி நபர்களினதோ கட்சிகளினதோ நலன்களைக் கருத்தில் கொண்டு, நாட்டில் சட்டங்களை இயற்றுவது ஜனநாயக முறையல்ல.

தனி நபர்களின் நடவடிக்கைகளால் பாடம் படித்து, அதன்படி எதிர்கால நலனுக்காகப் பொதுவான சட்டங்களை நிறைவேற்றிக் கொள்வது வேறு விடயம்.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர் என்ற காரணத்தால், பசில் ஊழல் பேர்வழியாகவில்லை. அதேபோல், இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் அனைவரும் திருடர்களும் அல்ல. எதிர்க்கட்சிகள் தலைதூக்க இடமளிக்காமல் பசில் செயற்பட்டமையே, கடந்த அரசாங்கம் அவரை குறிவைத்து, இந்தச் சட்டத்தை கொண்டு வந்தது.

மஹிந்தவின் அரசாங்கம் பெரும்பாலான மக்களால் வெறுக்கப்பட்டு வந்த நிலையிலும், பசில் மோசமான ஊழல் பேர்வழி என்று பெயர் பெற்றதாலுமே, அப்போது அது நியாயமாகத் தென்பட்டது.

அச்சட்டம் பிழையானது என்று கூற முடியாது. ஆனால், அதனை ஒரு குறிப்பிட்ட நபரை குறிவைத்து நிறைவேற்றியமை, நல்லாட்சி சித்தாந்தங்களை மீறும் செயலாகும்.

இந்தச் சட்டம் மட்டுமன்றி, பெரும்பாலான சட்டங்கள் நாட்டினதும் பொது மக்களினதும் நலனுக்காக இயற்றப்படுவதற்குப் பதிலாக, ஒரு குழுவினரது அல்லது சில நபர்களினது நலன்களுக்காகவே இயற்றப்படுகின்றன. உதாரணமாக, தொழிலாளர் போராட்டங்களை அடக்கி, நாட்டை ஆட்சி செய்யும் நோக்கிலேயே முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தன 1977ஆம் ஆண்டு நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை கொண்டு வந்தார்.

அவர், 1978ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய அரசியலமைப்பின் பிரகாரம், எம்.பிக்கள் கட்சி மாற முடியாது. இது எதிர்க்கட்சிகளிலிருந்து ஆளும் கட்சியான தமது கட்சிக்குத் தாவ முயலும் எம்.பிக்களுக்கு தடையாக இருப்பதைக் கண்ட அவர், கட்சி மாறியவர் முன்னைய கட்சியிலிருந்து நீக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட எம்.பி அதை எதிர்த்து வழக்காடும் வகையில் 1979ஆம் ஆண்டு அரசியலமைப்பின் இரண்டாவது திருத்தத்தை நிறைவேற்றினார்.

1980ஆம் ஆண்டு அவர் முன்னாள் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமையை ஏழு வருடங்களுக்கு இரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்தார்.

1982ஆம் ஆண்டளவில் அவரது அரசாங்கம் சரிவடைய ஆரம்பித்து இருந்தது. இந்த நிலையில், தமது கட்சி மேலும் மக்கள் வெறுப்பை சம்பாதித்துக் கொள்ளும்முன்னர், பிரதான போட்டியாளரான சிறிமா போட்டியிட முடியாத நிலையிலும், ஜனாதிபதி தேர்தலை நடத்தி, தமது ஆட்சியை நீடித்துக் கொள்ள அவர் நினைத்தார்.

அதற்காக, ஜனாதிபதி ஒருவர் பதவிக்கு வந்து நான்கு ஆண்டுகள் பூர்த்தியானால், ஜனாதிபதி தேர்தலை நடத்தக்கூடிய வகையில், 1982ஆம் ஆண்டு அரசியலமைப்பின் மூன்றாவது திருத்தத்தை கொண்டுவந்தார். அதன்படி அவர் அதேயாண்டு மீண்டும் ஜனாதிபதியானார்.

1988ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளரான அப்போதைய பிரதமர் ஆர். பிரேமதாஸ, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப்பின் உதவியை நாடினார். தேர்தல்களின் போது ஆசனங்களைப் பெற, ஒரு கட்சி குறைந்த பட்சம் 12.5 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும். அந்த வெட்டுப் புள்ளியை ஐந்து சதவீதமாக குறைத்தால், உதவி வழங்குவதாக அஷ்ரப் கூறினார். அதன்படி, 1988ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு, அந்த மாதம் 17 ஆம் திகதி, அதாவது ஜனாதிபதி தேர்தலுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர், அஷ்ரப்பின் வேண்டுகோள் சட்டமாக்கப்பட்டது.

மாறிமாறி ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் வகையிலும் கூட்டும் வகையிலும் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் 17ஆவது, 18ஆவது, 19ஆவது, 20ஆவது, 21 ஆவது ஆகிய திருத்தங்களும் நாட்டு நலன்களைப் பார்க்கிலும், கட்சிகளின் விருப்ப வெறுப்புகளின் படியே கொண்டுவரப்பட்டன.

இலங்கையில் பெரும்பாலான பிரச்சினைகளுக்குப் பிரதான காரணம் மிகவும் உயர் பதவியை வகிப்பவரிலிருந்து மிகவும் கீழ்மட்ட பதவியை வகிப்பவர் வரை, சகலரும் ஊழல், மோசடி, வீண்விரயம் ஆகியவற்றில் ஈடுபடுவதும் செயற்திறன், கடமை உணர்வு போன்றவை இல்லாதிருப்பதுமாகும் என்று அறியப்படுகின்றது.

முறையான சட்டத் தொகுதியொன்றின் மூலமே, அந்தப் பண்புகளில் ஓரளவாவது நாட்டில் நிலைநாட்ட முடியும். ஆயினும், ஊழலே அதற்கும் தடையாக அமைகிறது.

பெருமளவில் ஊழல் பேர்வழிகளைக் கொண்ட பாராளுமன்றத்தால் அவ்வாறான சட்டங்களை நிறைவேற்ற முடியாது. அவர்கள் தமது சொந்த நலன்களுக்காகவே சட்டங்களை கொண்டு வருகின்றனர்.

## கடிதங்கள்

### வெள்ள நீரில் கழிவுகளை வீசும் விசமிகள்

யாழ்ப்பாணம், சோமசுந்தரம் வீதியையும் கோவில் வீதியையும் இணைக்கும் கோவில் ஒழுங்கை பகுதியில், கழிவுகளை விசமிகள் வீசி வருவதால், அப்பகுதியில் வசிக்கும் மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தற்போது மழைக் காலம் ஆரம்பித்ததுள்ள நிலையில், குறித்த ஒழுங்கையில் வெள்ளநீர் தேங்கி நிற்கிறது. இதனால், ஒழுங்கைக்குள் வசிப்பவர்கள் போக்குவரத்து உள்ளிட்ட விடயங்களில் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில், தற்போது விசமிகள் அந்த ஒழுங்கைக்குள் கழிவுகளை கொட்டுவதால், பலத்த இன்னல்களை அப்பகுதிகளில் வசிப்போர் எதிர்நோக்கியுள்ளனர்.

வீசப்படும் கழிவுகள், மழை வெள்ளத்தில் மிதந்து வீட்டு வளவுகளுக்குள் வருவதாலும், வீதிகளில் வெள்ளநீருடன் கழிவுகள் சிந்திச்சிதறி காணப்படுவதாலும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பில் மாநகர சபை உள்ளிட்ட தரப்புகளுக்கு அறிவித்துள்ள போதிலும், உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எம். றொசாந்த்



# தமிழகத்துக்கு செம்மஞ்சள் எச்சரிக்கை

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதனால் சென்னை, திருவள்ளூர் உட்பட பல மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.

இதன்காரணமாக தமிழகத்துக்கு செம்மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




மேலும், தமிழகத்தில் இன்று முதல் ஐந்து நாள்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தஞ்சை, மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளுக்கு நேற்று (01) முதல் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதுடெல்லி

## தீவிரமடைந்து வரும் காற்று மாசு; பொதுமக்கள் அவதி



புதுடெல்லியில் காற்றின் தரமானது மிகவும் மோசமடைந்து வருகின்றது. இதன் காரணமாக புதுடெல்லியின் பலபகுதிகளில் பனிமூட்டம் போன்று தூசித் துகள்கள் நிறைந்து காணப்படுகின்றன.

இதனால் “மாசு நிறைந்த காற்றையே தினமும் சுவாசிக்கின்றோம். போக்குவரத்தை மேற்கொள்வது மிகவும் சிரமமாக உள்ளது” எனவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் காற்று மாசு அதிகரிப்பதைத் தடுக்க, அரசு தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

அதன்படி, ராஜஸ்தானில் செயற்பட்டு வரும் 45 தொழிற்சாலைகளை உடனடியாக மூடுமாறு காற்றின் தர மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

அதேபோல, புதுடெல்லியின் அண்டை மாநிலங்களான அரியானாவில் 17 தொழிற்சாலைகளும் உத்தரபிரதேசத்தில் 63 தொழிற்சாலைகளும் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், புதுடெல்லியில் புதிய பாராளுமன்ற கட்டடம் கட்டுமானப் பணி, தேச நலனுக்கான அத்தியாவசிய கட்டட பணிகள் தவிர்த்து பிற கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவும் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புனே

## இணையத்தை கலக்கும் உணவகம்




புனேவில் காது கேளாதவர்கள், வாய் பேச முடியாதவர்களால் நடத்தப்பட்டுவரும் ‘டெர்ராசின்’ (Terrasinne) என்ற உணவகம், மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இங்கு வருகை தரும் வாடிக்கையாளர்களும் கூட, சைகை மொழியிலேயே தங்களுக்கு விருப்பமான உணவுகளை கேட்டுப் பெற்றுக் கொள்கின்றனர்.

இங்கு காணப்படும் உணவுப் பட்டியல் அட்டையில் சைகை மொழியில் எந்தெந்த உணவுகளை எப்படி கேட்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதால் அதனைப் பின்பற்றி தேவையான உணவுகளை வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

மேலும் வாடிக்கையாளர்கள் உண்டு முடித்தவுடன் உணவகப் பணியாளர்கள் உணவு எப்படி உள்ளது எனக் கேட்டுத் தெரிந்துகொள்கின்றனர்.

இந்நிலையில் இவ் உணவகம் குறித்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குஜராத்

## 12 உறவினர்களை பறிகொடுத்த எம்.பி



குஜராத்தின் மோர்பி நகரில் வரலாற்று சிறப்புமிக்க தொங்கு பாலம் 30ஆம் திகதி திடீரென அறுந்து விழுந்தது.

இச்சம்பவத்தில் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என 140க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும் பலர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் இவ்விபத்தில் ராஜ்கோட் தொகுதி பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த எம்.பி மோகன்பாய் குந்தாரியாவின் குடும்பத்தினர் 12 பேர் உயிரிழந்திருப்பது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து குந்தாரியா கூறுகையில், “இவ்விபத்தில் எனது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உயிரிழந்துள்ளமை மிகவும் வேதனை அளிக்கின்றது. அத்துடன் எனது கண் முன்னே ஆற்றில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்டவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இவ்விபத்துக்கு காரணமான குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்” இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கீழ்பாக்கம்

## மனநலக் காப்பகத்தில் மலர்ந்த காதல்


கீழ்பாக்கம் மன நலக் காப்பகத்திற்குச் சிகிச்சைக்காக வந்த இருவர், காதலித்து திருமணம் செய்துகொண்ட சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


சென்னையைச் சேர்ந்தவர் மகேந்திரன். 42 வயதான இவர் குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக, ‘இருமுனையப் பிறழ்வு (Bipolar Affective Disorder) எனும் நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்.

இதன் காரணமாக மன நல சிகிச்சைக்காக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கீழ்பாக்கம் மன நல காப்பகத்திற்குச் சிகிச்சைக்காகச் சென்றுள்ளார்.

அதே காப்பகத்திற்கு மன அழுத்தத்துக்கான சிகிச்சை பெறுவதற்காக தீபா என்பவர் வந்துள்ளார். நாளடைவில் இருவருக்கும் ஒருவரை ஒருவர் பிடித்துப்போகவே, அது காதலாக மாறியுள்ளது.

அதேசமயம் இருவரும் பூரண குணமடைந்த





நிலையில் திருமணம் செய்துகொள்ளவும் தீர்மானித்துள்ளனர்.

தீபாவை முதன்முதலில் பார்த்தபோது மகேந்திரனுக்கு அவரது அம்மாவை போல தோன்றியதாகவும், அவருடன் பேசிப் பழகியதில் அவர் ஆசிரியர் என்பது தெரியவந்ததாகவும், தனது தாயாரும் ஆசிரியர் என்பதால் தீபாவை மிகவும் பிடித்துப் போனதாகவும், தனது வாழ்க்கையில் உள்ள அனைத்து உறவுகளும் தீபாவின் உருவத்தில் தனக்கு கிடைத்துள்ளன எனவும் மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

அதே சமயம் “என் வாழ்க்கையில் எனக்கு திருமணம் நடக்கும் என்று நான் நினைக்கவில்லை. இது அதிசயமாக உள்ளது” என தீபா நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இவர்களது திருமணம் ஒக்டோபர் 28 ஆம் திகதி சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் அதே மனநலக் காப்பக வளாகத்தில் உள்ள கோவிலில் இடம்பெற்றுள்ளது.

# வித்தியாசம் காட்டும் ராஷ்மிகா



தென்னிந்திய சினிமாவில் தற்போது டாப் முன்னணி நடிகைகளில் ஒருவராக திகழ்பவர்தான் ராஷ்மிகா மந்தனா. தற்போது ரசிகர்களின் லேட்டஸ்ட் கரஷ் ஆக மாறியிருக்கும் இவர் தெலுங்கில் விஜய் தேவர் கொண்டவுடன் இணைந்து நடித்த கீதா கோவிந்தம் என்ற படத்தின் மூலம் பல ரசிகர்களுக்கு பரிச்சயமானார்.



அதன் பிறகு தமிழில் கார்த்தியின் சுல்தான் திரைப்படத்தின் மூலம் அறிமுகமான இவர் மீண்டும் தமிழ், தெலுங்கு என பழமொழிகளில் வெளியாகி மாபெரும் பிளாக்பஸ்டர் ஹிட் அடித்த புஷ்பா தி ரைஸ் என்று அல்லு அர்ஜுனின் திரைப்படத்தில் நடித்து பட்டி தொட்டி எங்கும் பிரபலமாகி பல ரசிகர்களின் மனதில் லேட்டஸ்ட் கரஷ் ஆக வலம் வருகிறார்.

தற்போது தளபதி விஜயின் வாரிசு திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்து வரும் இவர் அப்படத்தை தொடர்ந்து புஷ்பா 2, மிஷன் மஜ்னு படங்களில் நடித்து வருகிறார். இப்படி ஒரு பக்கம் பிசியாக நடித்து வரும் இவர் மற்றொரு பக்கம் ரசிகர்களை கவரும்படி புகைப்படங்கள் மற்றும் விளம்பர புகைப்படங்களை பதிவிட்டு உற்சாகப்படுத்தி வருவார். அந்த வகையில் அவர் தற்போது கடற்கரையில் கவர்ச்சி போஸ் கொடுத்து எடுத்திருக்கும் லேட்டஸ்ட் புகைப்படத்தை பதிவிட்டிருக்கிறார்.




## இரவின் நிழல்

‘ஒத்த செருப்பு’ படத்திற்கு பிறகு பார்த்திபன் இயக்கி நடித்திருக்கும் படம் தான் “இரவின் நிழல்”. இப்படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில் வரலட்சுமி சரத்குமார், ரோபோ சங்கர், பிரிகடா ஆகியோர் நடித்துள்ளனர்.


இப்படத்தை புதிய முயற்சியாக 94 நிமிடம் 36 நொடிகளில் ஒரே ஷாட்டில் படமாக்கி உள்ளனர். குறிப்பாக உலகிலேயே Non Linear முறையில் படமாக்கப்பட்ட முதல் சிங்கிள் ஷாட் திரைப்படம் இந்த இரவின் நிழல் என பார்த்திபன் பல்வேறு பேட்டிகளில் கூறி இருந்தார்.

இதனால் அதிக ஆர்வத்தோடு இருந்த ரசிகர்களுக்கு இப்படம் பெரும் விருந்தாக அமைந்திருந்தது. இப்படம் ரசிகர்களின் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது மட்டுமின்றி பல விருதுகளையும் பெற்று சாதனை படைத்துள்ளது.

இந்நிலையில் இப்படம் இன்று அல்லது நாளை பிரபல ஓடிடி தளமான அமேசான் பிரைமில் வெளியாகும் என்ற தகவலை நடிகர் பார்த்திபன் தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து ஆர்வத்துடன் அவர் வெளியிட்டுள்ள பதிவு வைரலாகி வருகிறது. அதில் அவர், காலை வணக்கம்! அமேசானில் இன்றோ நாளையோ ‘இரவின் நிழல்’ வந்தே விடும். அதை வரவேற்க நீங்களும், அறிவிக்க நானும் ஆவலுடன் இருக்கிறோம். பார்ப்போம் நீங்கள் காட்டும் ஆர்வத்திற்கு நன்றி. என்று அப்பதிவில் கூறியிருக்கிறார்.

## அம்மாவின் ஆசை



மறைந்த முன்னணி நடிகை ஸ்ரீதேவியின் மகளான ஜான்வி கபூர் முன்னணி நடிகையாக திகழ்ந்து வருகிறார். இவர் தற்போது தமிழில் நெல்சன் இயக்கத்தில் வெளியான கோலமாவு கோகிலா என்கின்ற திரைப்படத்தின் இந்தி ரீமேக்கான குட் லக் ஜெர்ரி என்னும் திரைப்படத்தில் நடித்திருக்கிறார்.

அவரது தந்தையான போனிகபூர் தமிழில் அஜித் குமார் நடித்த நேர்கொண்ட பார்வை, வலிமை திரைப்படங்களை தயாரித்துள்ளார். மேலும் அஜித்தின் துணிவு திரைப்படத்தையும் தற்போது அவர் தயாரித்து வருகிறார்.

இந்நிலையில், ஜான்வி கபூர் தற்போது தனது அம்மாவின் கனவை நிறைவேற்ற காத்துக் கொண்டிருப்பதாக தகவலை பகிர்ந்திருக்கிறார்.

அதாவது நடிகை ஸ்ரீதேவி கௌரி ஷிண்டே இயக்கத்தில் இங்கிலீஷ் விங்கிலீஷ் என்னும் திரைப்படத்தில் நடித்திருந்தார். வித்தியாசமான கதை அம்சத்தை கொண்ட இப்படத்தில் சிறப்பு வேடத்தில் நடிகர் அஜித் குமார் நடித்திருந்தார்.

தற்போது இந்த இயக்குனரின் இயக்கத்தில் எப்படியாவது தான் நடிக்க வேண்டும் என்று ஜான்வி கபூர் தெரிவித்திருக்கிறார். ஏனெனில் நான் என் அம்மாவிடம் பேசியபோது, அவர் நீ நிச்சயமாக கௌரி ஹிண்டேவுடன் ஒரு படம் பண்ண வேண்டும், அதுதான் தனது ஆசை எனக் கூறியிருந்தார்.

அதனால் அவரது இயக்கத்தில் நான் நடிக்க காத்துக் கொண்டிருக்கிறேன் என்று உருக்கமாக நடிகை ஜான்வி கபூர் இந்த தகவலை பகிர்ந்து இருக்கிறார்.

## சமந்தாவுக்கு ஆறுதல்

தென்னிந்திய திரையுலகில் பிரபல முன்னணி நடிகையாக வலம் வருபவர் கீர்த்தி சுரேஷ். தமிழ், தெலுங்கு, மலையாளம் என பல மொழிகளில் வித்தியாசமான கதைகளை தேர்ந்தெடுத்து நடித்து வரும் கீர்த்தி சுரேஷ் தற்போது சமூக வலைதள பக்கத்தில் தனது



உயிர்த்தோழியான சமந்தாவின் உடல்நலம் குறித்து மோட்டிவேஷனலான பதிவு ஒன்றை வெளியிட்டு இருக்கிறார்.

அதாவது நடிகை சமந்தா சமீபத்தில் தனக்கு மயோசிடிஸ் எனப்படும் ஆட்டோ இன்யூன் நோய் இருப்பது கண்டறியப்பட்டு இருப்பதாக தகவலை பகிர்ந்து அத்துடன் உருக்கமான பதிவையும் வெளியிட்டு இருந்தார்.

அவரது பதிவிற்கு ரசிகர்களும் பல திரை பிரபலங்களும் விரைவில் குணமடைய வாழ்த்துக்களை தெரிவித்து வருவதை தொடர்ந்து சமந்தாவின் தோழியான நடிகை கீர்த்தி, அவருக்கு ஆறுதல் அளிக்கும்



வகையில் ‘உனக்கு நிச்சயம் அதிக சக்தி கிடைக்கும். விரைவில் வலிமையுடன் நலம்பெற்று திரும்புவாய்’ என்று தெரிவித்துள்ளார். அது தற்போது வைரலாகி வருகிறது.


பிரேசில்




# ஜனாதிபதிக்கு எதிராக மக்கள் வீதி மறியல்

பிரேஸிலில் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில், அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதியான லுலா டி சில்வா, தற்போதைய ஜனாதிபதி போல்சனாரோவைத் தோற்கடித்து மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போல்சனாரோவின் ஆதரவாளர்கள், கோயாஸ் உட்பட 16 மாகாணங்களில் உள்ள நெடுஞ்சாலைகளில் கனரக வாகனங்களை நிறுத்தி வீதி மறியலில் ஈடுபட்டு வருகின்றனர்.






அமெரிக்கா

## 8 தந்தைகள்; 11 குழந்தைகள்

### பெண்ணின் வினோத ஆசை

பெண்ணொருவர் எட்டு ஆண்களின் மூலம், 11 குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ள அதிர்ச்சி சம்பவம் அமெரிக்காவின் டென்னசி நகரில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நகரில் வசித்தவரும் பிஹாய் என்பவரே இவ்வாறு 11 குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.

இது குறித்து பிஹாய் கருத்துத் தெரிவிக்கையில், “எட்டு ஆண்களின் மூலம் எனக்கு 11 குழந்தைகள் பிறந்துள்ளன. இதற்கு நான் வெட்கப்படவில்லை. என் குழந்தைகளுக்கு ஒரு தந்தை மட்டும் இருந்தால், அவர் என்னை விட்டுப் பிரிந்தாலோ அல்லது இறந்துவிட்டாலோ, என் குழந்தைகள் தந்தை அற்றவர்களாகி விடுவார்கள். ஆனால் இப்போது எட்டுப் பேரில் மூன்று பேர் இல்லை. என்றாலும் ஐந்து பேர் எனது பிள்ளைகளுக்குத் தந்தைகளாக இருக்கிறார்கள். அதுமட்டுமில்லாமல் நான் இன்னும் பல குழந்தைகளையும் பெற்றுக் கொள்ள விரும்புகிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இவரது கருத்தைப் பலரும் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

ஈரான்



## ஈரானில் கொடூரம்

### அரசுக்கு எதிராக வலுக்கும் ஆர்ப்பாட்டங்கள்

ஈரானில் அண்மையில் ஹிஜாப்பை முறையாக அணியவில்லை எனக் கூறி கைது செய்யப்பட்ட மஹ்சா அமினி என்ற இளம்பெண் பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்தார்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்கானோர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், சமூக வலைதளத்தில் பிரபலமான மெஹர்ஷாத் ஷாஹிதி என்ற 19 வயதான இளைஞரும் பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

சமையல் கலை நிபுணரான மெஹர்ஷாத் ஷாஹிதியை இன்ஸ்டாகிராமில் இலட்சக்கணக்கானோர் பின்தொடர்கின்றனர்.

இந்நிலையில் ஈரானின் புலனாய்வுப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர் அதிகாரிகளால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



எனினும் குறித்த இளைஞர் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை மறுத்துள்ள அதிகாரிகள், அவரின் உயிரிழப்புக்கான காரணத்தை விரைவில் தெரிவிப்பதாகக் கூறியுள்ளனர்.

இந்நிலையில் மெஹர்ஷாத் ஷாஹிதியின் மரணத்துக்கு நீதிகோரி ஆயிரக்கணக்கான மக்கள் அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஸ்கொட்லாந்து

## ‘பிங்’ வர்ணம் பூசிய பெண்ணுக்கு அபராதம்

ஸ்கொட்லாந்தின் எடின்பர்க் நகரில், வீட்டின் கதவில் இளம் சிவப்பு நிறத்தில் வர்ணம் பூசியதற்காக பெண் ஒருவருக்கு இலங்கை மதிப்பில் சுமார் 85 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மிராண்டா டிக்சன் என்ற பெண்ணே அண்மையில் தனது வீட்டை புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். இதன்போது வீட்டின் கதவுக்கு இளம் சிவப்பு நிறத்தில் வர்ணம் பூசியுள்ளார்.

எடின்பர்க் நகராட்சி கவுன்சில் விதிகளின் படி, வீட்டின் முன்பக்க கதவு மங்கலான நிறத்திலேயே இருக்க வேண்டும் என கூறப்படுகிறது.

இந்நிலையில் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதோடு, கதவுக்கு மங்கலான வெள்ளை வண்ணம் தீட்டவும் உத்தரவிடப்பட்டுள்ளது.



அமெரிக்கா



## எலோன் மஸ்க்கோடு கைகோர்க்கும் ட்ரம்ப்?

, வன்முறையைத் தூண்டும் விதத்தில் கருத்துகளை வெளியிட்ட காரணத்திற்காக, அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கணக்கை, டுவிட்டர் முடக்கியிருந்தது.

இந்நிலையில், “ஜனநாயகத்தின் அடித்தளமாக விளங்குவது கருத்து சுதந்திரமே” எனக் கூறிவரும் எலான், ட்விட்டர் நிறுவனத்தை வாங்கியுள்ள நிலையில், ட்ரம்ப் மீதான தடை நீக்கப்படும் வாய்ப்பு இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அதேசமயம் எலோனுக்கு வாழ்த்துத் தெரிவித்த ட்ரம்ப் “இப்போது தான் டுவிட்டர் புத்திசாலியிடம் உள்ளது. இதற்கு மேலும் தங்கள் நாட்டை வெறுக்கக்கூடிய இடதுசாரி மனநோயாளிகளிடம் டுவிட்டர் இருக்காது” என்றும் தெரிவித்துள்ளார்.



### இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

## ஆப்கானிஸ்தானை வீழ்த்திய இலங்கை

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், பிறிஸ்பேணில் நேற்று நடைபெற்ற ஆப்கானிஸ்தானுடனான குழு ஒன்று சுப்பர் - 12 போட்டியில் இலங்கை வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தானின் அணித்தலைவர் மொஹமட் நபி, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான், ஆரம்பத்திலிருந்தே குறிப்பிட்ட இடைவெளிகளில் லஹிரு குமார (2), வனிடு ஹஸரங்க (3), தனஞ்சய டி சில்வா, கசுன் ராஜிதவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 145 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, தனஞ்சய டி சில்வாவின் ஆட்டமிழக்காத 66 (42) ஓட்டங்களோடு 18.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

பந்துவீச்சில், முஜீப் உர் ரஹ்மான், ரஷீட் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக வனிடு ஹஸரங்க தெரிவானார்.

எங்கள் சிங்கங்களை வாழ்த்திட நீங்களும் இணைந்துக்கொள்ளுங்கள்
QR குறியீட்டை Scan செய்து உங்கள் வாழ்த்துகளை பதிவு செய்யுங்கள்
Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்
Dialog
எதிர்காலம் இன்றே.



### இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

## நியூசிலாந்தை தோற்கடித்த இங்கிலாந்து

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், பிறிஸ்பேணில் நேற்று நடைபெற்ற நியூசிலாந்துடனான போட்டியில் இங்கிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இங்கிலாந்து: 179/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜொஸ் பட்லர் 73 (47), அலெக்ஸ் ஹேல்ஸ் 52 (40) ஓட்டங்கள். பந்துவீச்சு: இஷ் சோதி 1/23 [4], மிற்செல் சான்ட்னெர் 1/25 [4])

நியூசிலாந்து: 159/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: கிளென் பிலிப்ஸ் 62 (36), கேன் வில்லியம்ஸன் 40 (40) ஓட்டங்கள். பந்துவீச்சு: சாம் கர்ரன் 2/26 [4], கிறிஸ் வோக்ஸ் 2/33 [4])

போட்டியின் நாயகன்: ஜொஸ் பட்லர்

இன்று காலை நடைபெறவுள்ள குழு இரண்டு சுப்பர் -12 போட்டியில் நெதர்லாந்தும் சிம்பாப்வேயும் பிற்பகல் 1.30 மணிக்கு பங்களாதேஷும் இந்தியாவும் மோதுகின்றன.



## அணியினருக்கு கௌரவம்

■ சுப்ரமணியம் பாஸ்கரன்

பாடசாலைகளுக்கிடையிலான அகில இலங்கை ரீதியிலான பெண்களுக்கான கபடித் தொடரில், 17வயதுப் பிரிவில் சம்பியனாகிய உருத்திரபுரம் சிவநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அணியையும், 20வயதுப்பிரிவில் சம்பியனாகிய உருத்திரபுரம் மகா வித்தியாலய அணியையும் கௌரவிக்கப்பட்டன.

உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கூழாவடி சந்தியிலிருந்து வீராங்கனைகள் பாடசாலைகளின் அதிபர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மாலை அணிவித்து பாண்ட் வாத்திய இசையுடன் பாலையடி அருட்செல்வ விநாயகர் ஆலயம் வரை அழைத்து செல்லப்பட்டு வீராங்கனைகள் பொன்னாடை போர்த்தி கெரவிக்கப்பட்டனர்.

### தேசிய மட்டத்துக்கு

## தெரிவான சாதுலியா மாணவர்கள்

■ எச்.எம்.எம். பர்ஸான்

இலங்கை பாடசாலை கால்பந்தாட்ட சங்கத்தால் நடத்தப்பட்ட 14 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான மாவட்ட மட்ட கால்பந்தாட்டத் தொடரில் சம்பியனான பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலய மாணவர்கள் தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் எம்.எல். கலீல் றகுமான் தெரிவித்தார்.

பயிற்சிகளை வழங்கிய உடற்கல்வி ஆசிரியர் பீ.எம். ஜாமில் கபூரி, விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களான ஏ.ஏ.எம். இர்பான், ஏ.எம்.எம். வபாஸ் ஆகியோருக்கும் மாணவர்களுக்கு சீருடைகளை அன்பளிப்பு செய்த வேர்ள்ட் ஸ்டார் கழகத்துக்கும் றகுமான் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.



## ஆசிரியர் அணி அபார வெற்றி

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை மற்றும் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி ஆகிய இரு பாடசாலையின் ஆசிரியர் அணிகளுக்கிடையே கடந்த (31) திங்கட்கிழமை நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில், இரு போட்டிகளிலும் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆசிரியர் அணியினர் அபார வெற்றியினை பெற்றுக்கொண்டனர்.

முதல் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கார்மேல் பற்றிமா கல்லூரி அணியினர் 35 ஓட்டங்களை பெற்றனர். உவெஸ்லி உயர்தர பாடசாலை அணியினர் 4 ஓவர் 2வது பந்து வீச்சுப் பிரதியில் இலகுவாக வெற்றி இலக்கை அடைந்தனர்.



இரண்டாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய உவெஸ்லி உயர்தர பாடசாலை அணியினர் 50 ஓட்டங்களை பெற்றனர். கார்மேல் பற்றிமா கல்லூரி அணியினர் ஓவர் முடிவில் 36 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதனால் 14 ஓட்டங்களினால் உவெஸ்லி உயர்தர பாடசாலை ஆசிரியர் அணியினர் வெற்றியினை பெற்றுக்கொண்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 02 நவம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.